Registered as a news paper.
பக்கங்கள்: பதினான்கு + II
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

தீபாவளி வாழ்த்துக்கள்
லொயலாஸ்
கல்யாண மண்டபம்
59, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 3352
எங்கள் சேவை உங்கள் தேவைக்கே.
(சி-100)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 28 (04.11.2002) திங்கட்கிழமை இதழ் : 35



பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பேணாட், மிலிந்த, வெஸ்ட்பேர்க், ரவூப், திருமதி பாலா, சொல்ஹெய்ம், பீரிஸ், ஹெல்கிஸன், பாலா, தமிழ்ச்செல்வன், கருணா, ஜோய்.

**விண்ணாணம் விநாசியர்**




எல்லாருக்கும் நமது ஈழநாட்டிண்டை தீபாவளி நல்வாழ்த்துக்களை குதூகலமாச் சொல்லுறன்...

# குறுகிய காலத்தில் குறிப்பிடத்தக்க வெற்றி;

# பேச்சுக்களில் இரு தரப்பும் பூரண திருப்தி!

## ஒஸ்லோ சந்திப்பில் அடுத்த கட்ட நகர்வு

(நொகன்பத்தமிலிருந்து நமது நிருபர் விதுர்ஷன்)

தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் இரு தரப்பும் பூரண திருப்தி கண்டிருப்பதாக - நேற்றுப் பேச்சுக்களின் முடிவில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் - விடுதலைப் புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் தெரிவித்தனர்.

குறுகிய காலத்தில் பேச்சுக்கள் எதிர்பார்த்ததை விட குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றிருப்பதாக அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

அடுத்த கட்ட நகர்வு ஒஸ்லோ சந்திப்பினூடாக மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.





நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் பீரிஸ், பாலா பரஸ்பரம் கைகுலுக்குவதை முதலாவது படத்திலும், பாலாவுடன் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், கேணல் கருணா ஆகியோர் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## இனி மாதாந்தம் சந்திப்பு!

(விதுர்ஷன்)

அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் அடுத்த கட்டப் பேச்சுக்கள் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ளது. இப் பேச்சுக்கள் டிசெம்பர் 2ம் திகதி முதல் 5ஆம் திகதி வரை நடைபெறும் என நோர்வேயின் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை அடுத்தடுத்த கட்டச் சமாதானப் பேச்சுக்கள் - ஜனவரி 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரையும், பெப்ரவரி 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரையும், மார்ச் (10ஆம் பக்கம் பார்க்க)

### பாலா - ரணில் இம்மாத இறுதியில் ஒஸ்லோவில் சந்திப்பு

(நொகன்பத்தம்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் இம்மாத இறுதியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இச்சந்திப்பு நோர்வேயின் தலை

(10ஆம் பக்கம் பார்க்க)

# முழுமையான அரசியல் களத்துக்கு புலிகள் தயாராகி வருகின்றனர்!

## தாய்லாந்தில் செய்தியாளர்களிடம் ஆலோசகர் பாலசிங்கம்

(நொகன்பத்தம்)

விடுதலைப் புலிகள் இயக்கம் ஓர் அரசியல் அமைப்பாக மாற ஆரம்பித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

எமக்கு எதிரான அரசியற் குழுக்களையும் ஏற்று அங்கீகரிக்கத் தயாராகி விட்டோம் என்றும் வட., கிழக்கில் பல்வேறு கருத்துக்கள் நிலவ நாம் தற்போது இடமளித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். தற்போதைய இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் குறுகிய காலத்தில் கணிசமான அளவு வெற்றிகண்டுள்ளது.



வன்முறை சார்ந்த கொடிய யுத்தம் ஒன்றில் இரு தரப்பும் இருபது வருடங்கள் ஈடுபட்டிருந்தோம். இதனால் பேச்சுக்களில் உடனடித் தீர்வுகளை எதிர்பார்க்க முடியாது. கட்டங்கட்டமாகவே நகரலாம். எனினும், தாய்லாந்துப் பேச்சுக்களில் நாம் குறுகிய காலத்துள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றிருக்கிறோம்.

தேவையற்ற காலதாமதங்களைத் தவிர்த்து இறுதியான, நிரந்தரமான தீர்வுக்கான முயற்சிகளில் இரு தரப்புமே அர்ப்ப

(10ஆம் பக்கம் பார்க்க)

## எத்தகைய தடைகள் வந்தாலும் அமைதிவழியில் உறுதியாகவுள்ளோம்

### பேச்சுக்களின் முடிவில் அமைச்சர் பீரிஸ்

எப்படியான தடைகளும், நெருக்கடிகளும் வந்தாலும் எமது சமாதானப் பாதையில் இருந்து வழுவாது தொடர்ந்து எமது பாதையில் பயணிப்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். இவ்வாறு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.



சமாதானப் பேச்சுவார்த்தையின்போது நாம் விவாதத்தைக் கையாண்ட விதத்தில் இருந்தே சமாதானம் குறித்து எங்களின் உறுதிப்பாடு வெளிப்பட்டிருக்கும் என்று நான் கருதுகிறேன் என்றும் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

SERENDIB AIRLINE சர்வதேச சேவையில் உள்ள நாங்கள் உங்கள் உள்நாட்டுச் சேவையிலும்
J/FT/P - 021-222 3916, 0777-801038, CMB/505632



தாய்லாந்தில் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் முடிவடைவதையொட்டி, பேச்சுக்கள் நடைபெற்ற றோஸ் கார்டின் ஹோட்டலில் ஞாபகார்த்த மரமொன்றை நட்டு, நீர் ஊற்றி, அதற்கான அறிவிப்புப்பலகையை நிறுத்தும் பாலா, பீரிஸ், ஹெல்கிஸன்.



பேச்சுக்கள் முடிந்த பின்னர் செய்தியாளர் சந்திப்பில் பீரிஸ், ஹெல்கிஸன், பாலா.

# மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகளை முன்னெடுக்க இருதரப்பும் முழு இணக்கம்!

## பேச்சுக்கள் பற்றி நோர்வே அரசாங்கம் உத்தியோகபூர்வ அறிக்கை

(நொகன்பத்தம்)

தாய்லாந்தின் நொகன்பத்தமில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையிலான முதற்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையின் இரண்டாவது சுற்றுச் சந்திப்பு நேற்று முடிவு பெற்றுள்ளது.

மேற்படி சந்திப்பின்போது கூட்டுச் செயலணிக்குழுவில் இடம்பெறவேண்டிய உப-குழுக்கள் பற்றிய முடிவிற்கு இரு தரப்பினரும் வந்துள்ளனர். இருபது வருடகாலமாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியல் நடைபெற்ற யுத்தம் காரணமாகப் பாரியளவில் யுத்த அழிவுகள் இடம் பெற்றுள்ளன.

இன்றைய சமாதானச் சூழலில் மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளை உடனடியாக இனம் காண்பதற்காக வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. கூட்டுச் செயலணிக்குழுவில் உள்ள பிரதான உபகுழுவான அரசியல் உப குழு எதிர்வரும் 25ஆம் திகதி நோர்வேயில் சந்திக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உபகுழுவில் விடுதலைப் புலிகள் தரப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் நான்கு உறுப்பினரும், அரசாங்கத் தரப்பில் பேணாட் குணதிலக தலைமையில் இரு உறுப்பினர்களும் மேலும் முஸ்லிம் சமூகத்திலிருந்து இரு உறுப்பினர்களும் இணைந்து கூட்டாகச் செயற்பட உள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என நோர்வே அரசு உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான நோர்வே அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையின் முழுவிபரமும் வருமாறு:-

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் 31 அக்டோபர் முதல் நேற்று வரை றோஸ் கார்டின், தாய்லாந்தில் நடைபெற்றுள்ளன. இரு தரப்பினரிடையேயும் மிகவும் முன்னேற்றகரமான நட்புறவுச் சூழலில் கட்டம் கட்டமாக பரந்தளவு விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன. இக்கலந்துரையாடலில் தற்போதைய சூழலில் நிலவும் சவால்களாகவுள்ள விடயங்கள் மற்றும் நீண்ட கால நோக்கில் எட்டப்பட வேண்டிய தீர்வுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மேலும் வலுவூட்டுவதற்கான சாத்தியங்கள் பற்றியும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு வழங்கவுள்ள ஒத்துழைப்பு பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அண்மைக்காலங்களில் கிழக்கு மாகாணத்தில் நிலவிய தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையிலான முறுகல் நிலை பற்றியும் அம்முறுகல் நிலையால் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையில் உடனடியாகக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் பதற்ற நிலையைத் தணித்து இனங்களுக்கிடையிலான கூட்டுறவையும் ஒத்துழைப்பையும் வட., கிழக்குப் பகுதியில் வளர்ப்பதற்கான சாத்தியங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களினதும் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொள்வது, மனித உரிமைக்கு மதிப்பளித்து பேணுவதற்கான சாத்தியங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. மேற்படி விடயங்களில் கலந்துரையாடப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகள் நோர்வே அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

சமாதான முயற்சிகளின்போது மேலும் தொடர்ந்து பேணுவதற்குத் தேவையான எதிர்காலத் திட்டங்கள் மற்றும் சமாதானத்திற்கான களநிலவரங்கள் பற்றிய அவசியத் தேவைப்பாடுகளை எல்லாக் கட்டங்களிலும் உடனடியாக கவனத்தில் எடுப்பதாகவும் முடிவு காணப்பட்டுள்ளது.

உபகுழுக்களின் விசேட விடயங்கள் பற்றியும் அவர்கள் செய்யவுள்ள நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளும் சமாதான பேச்சுக்களின் போது எடுத்தாளப்படும் எனவும் முடிவு காணப்பட்டுள்ளது. மேற்படி விடயங்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு மேலும் வலுச் சேர்ப்பதாக அமையும்.

கூட்டுச் செயலணிக்குழுவின் உப குழு, உடன் கவனிக்கப்படவேண்டிய மனிதாபிமானத்தேவைகள் மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளை அறிந்து அவற்றை அமுலாக்கல் செய்வதற்கான தகுதிப்பாட்டினைக் கொண்டிருக்கும். மேலும் மேற்படித் திட்டங்களை அமுல் செய்வதற்கான நிதி மூலங்களையும் அது தீர்மானிக்கும்.

உள்ளூர்த் தொழிலாளர், உள்ளூர் நிறுவனங்களைப் பயன்படுத்தி எல்லா இனக்குழுக்களினதும் தேவைகள், விருப்புக்களை நிறைவேற்றும் பொறுப்பு இந்த உபகுழுவைச் சாரும். இதற்கான நிதித் தேவைக்கு, உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து பெறப்படும் நிதியினைக் கொண்டு ஒரு நிதியம் உருவாக்கப்படும். இந்நிதியத்திலிருந்து உபகுழு தனது கடமைகளை நிறைவேற்றும்.

உபகுழுவில் அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக எம்.டி.டி.பீரிஸ், எம்.ஐ. ராபீக் என்போருடன் மேலதிகமாக ஒரு முஸ்லிம் சமூகத்தவரும் அங்கம் வகிப்பார். மறுபுறமாக விடுதலைப் புலிகள் தரப்பில் ஜோய் மகேஸ்வரனும் உள்ளடக்கப்படுவார். உபகுழுவினது கூட்டங்கள் கிளிநொச்சிக் கச்சேரியிலுள்ள இதற்கென ஒதுக்கப்பட்ட அலுவலகத்தில் நடைபெறும்.

உபகுழுவினது கூட்டங்கள் கிளிநொச்சி, கொழும்பு, மட்டக்களப்பு மற்றும் கல்முனை ஆகிய இடங்களிலும் இடம்பெறும் என முடிவு காணப்பட்டுள்ளது.

வட., கிழக்குப் பகுதியில் இடம் பெயர்ந்த மக்களது மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களது பெண்கள், பிள்ளைகளது புனர்வாழ்வு என்பவற்றுக்கான நிதியினைப் பெறுவதற்காக ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு இரு தரப்பினரும் கூட்டாக வேண்டுகோள் விடுக்கவுள்ளனர். இதற்கான தயாரப்படுத்தலை நோர்வே அரசு மேற்கொண்டு வருகின்றது. மேலும் வெளிநாட்டு முதலீட்டிற்கான அதிகரிப்பின் மூலம் தென்னிலங்கையையும் இச்சமாதான முயற்சிகள் மூலம் பயன்பெற ஆவன செய்யப்படும்.

முதல் சுற்றுச் சந்திப்பில் ஏற்படுத்திக்கொண்ட உடன்பாட்டின் பிரகாரம் மீள்குடியேற்றத்திற்கு வசதியாக உயர் பாதுகாப்பு வலயங்களை கட்டங்கட்டமாக நகர்த்தி சமாதானப் புறச் சூழ்நிலையை உருவாக்கும் பொறுப்புடன் உருவாக்கப்பட்டுள்ள உபகுழுவில் இராணுவ மற்றும் புலிகள் தரப்பு பிரதிநிதிகள் கூட்டாக இணைந்து செயற்படுவர். இக்குழு மீள்குடியேற்றத்திற்கான சாத்தியங்களை ஆராயும். இவ் உப குழுவிற்கு அரசாங்கத் தரப்பில் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் புலிகள் தரப்பில் தளபதி கருணாவும் தலைமை தாங்குவர்.

சமாதான முயற்சிகளுக்கு மேலும் உரஞ்சேர்ப்பதற்காக சாதாரண மக்களது வாழ்விலும் சமாதானத்தை கட்டியெழுப்ப, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கைதிகள் விடுதலை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் சார்பாக அன்ரன் பாலசிங்கமும் அரசாங்கத் தரப்பில் ஜி.எல்.பீரிஸும் தலைமை தாங்கும் அரசியல் உபகுழு, இன முரண்பாட்டை தீர்க்கும் நோக்குடன் அரசியல் விடயங்கள் மற்றும் அதிகாரப்பகிர்வு, நிர்வாகப் பரவலாக்கல் ஆகிய முக்கிய விடங்களைக் கையாளவுள்ளது. இதற்கான சர்வதேச மாதிரிகளையும் மற்றும் யுத்தங்களுக்குப் பின்னான அரசியல் திட்ட மாதிரிகளையும் ஆராய்ந்து இலங்கைக்கான நிரந்தர அமைதியினை ஏற்படுத்துவதற்கான விடயங்களையும் மேற்படி உபகுழு ஆராயும்.





பேச்சுக்கள் முடிவடைந்த பின்னர் குழுப் புகைப்படம் எடுப்பதற்காக தயாராகும் இரு தரப்புக் குழுவினரும் நோர்வேப் பிரதிநிதிகளும்.


ராஜா
யாழ்ப்பாணம்.
தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.00
இயக்கம்: K.S.ரவிக்குமார்.



நிறைஞ்சனாஸ்
சங்கானை
நிறைஞ்சனாஸ் ரசிகர்களுக்கு எமது தீப்ாவளி வாழ்த்துக்கள்.
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00
விஜய். சிம்ரன் நடித்த
துள்ளாத மனமும் துள்ளும்
இன்றும் சனி. ஞாயிறு மட்டும் இரவு 8.45 காட்சி
"FINAL FIGHT"
(சி-139) (கராட்டிப் படம்)

நரேன் வீடியோ அன் போட்டோ
தலைமையகம் - நாவற்குழி, கைதடி.
கிளை - 309, அரசடி வீதி, நல்லூர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
அதிநவீன கணினி மிக்சர் மூலம் சிறந்த முறையில் வீடியோ படம்பிடித்திடலாம்.
(சி-146)

## சின்னஞ்சிறு செய்திகள்

### மந்திகைச் சந்தி விபத்தில் யுவதி படுகாயம்

(மந்துவில்)

மந்திகைச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி யுவதியொருவர் தலையில் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இவ்விபத்துச் சம்பவத்தில் காயமடைந்தவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(28)

### பொதுக்கிணறுகள் திருத்தம்

(மந்துவில்)

நியாப் நிறுவன உதவியுடன் சாவகச்சேரிப் பிரதேச சபையினால் - 50 இற்கும் மேற்பட்ட பொதுக்கிணறுகளைத் திருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(28)

### மண்டப அடிக்கல் நாட்டு விழா

(மந்துவில்)

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தின் - புதிய மண்டப அமைப்புக்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுபபினர் ஜி.கஜேந்திரகுமார் புதிய மண்டபத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

(28)

### பயணிகளுக்கு உதவ பளையில் நீர்த்தாங்கி

(சரசாலை)

பளை நகரப்பகுதியில் தங்கும் மக்களின் நலன்கருதி ஆயிரம் லீற்றர் கொள்வனவு கொண்ட பிளாஸ்ரிக் நீர்த்தாங்கி ஒன்றை பளைப் பிரதேச செயலகம் வழங்கியுள்ளது.

தென்னிலங்கையில் இருந்து வருகை தரும் பயணிகள் இரவு வேளையிலே பளைப்பிரதேசத்தில் தங்குவதும் குறிப்பிடத்தக்கது.

(34)

### புனரமைக்கப்படும் மட்டுவில் கந்தசாமி கோவில்

(சரசாலை)

மட்டுவில் வேரக்கேணி கந்தசாமி கோவிலில் மிகவிரைவில் நித்திய, நைமித்திய பூசைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளன. யுத்த அனர்த்தங்களில் சேதமடைந்த ஆலய கட்டடங்கள் பொது மக்களால் துப்புரவு செய்யப்பட்டு புனரமைக்கப்படுவதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

(34)

### துன்னாலை வடக்கில் கலாசார மண்டபம்

(வடமராட்சி)

துன்னாலை வடக்கில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதி உதவியுடன் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தினை அண்மையில் யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி எஸ்.பாலகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

(23)

### வேலணையில் சட்டவிரோத மது விற்பனை

(வேலணை)

வேலணைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வேலணை பிரதேசசபை, வேலணை பிரதேச செயலகம், பாடசாலை, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என்பன அமைந்துள்ள வேலணை சந்திப்பகுதியில் உள்ள கடை ஒன்றில் இவ் விற்பனை நடந்து வருகிறது.

(15)

# தீவுப்பகுதிக்கு விரைவில் அம்புலன்ஸ் படகுச் சேவை

(தீவகம்)

யு.என்.எச்.சி.ஆரின் நிதி உதவியுடன் தீவகப்பகுதி மக்களின் மருத்துவச் சேவையை மேம்படுத்துவதற்கென அம்புலன்ஸ் படகுக்கான நிதி கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருந்தது. படகுக்கான கட்டுமாணப் பணி ஆரம்பிக்கப்பட்டு நிதிப் பற்றாக்குறை காரணமாக இடைநிறுத்தப்பட்டு இருந்த வேலைகள் அரச அதிபர், ஊர்காவற்துறைப் பிரதேச செயலாளர், யு.என்.எச்.சி.ஆர். மாவட்ட மீளாய்வுக் குழுவினருக்கு இடையே நடந்த கூட்டத்தில், மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணமாக ரூபா 30 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கட்டுமானப்பணி விரைவில் பூர்த்தியாக்கப்பட்டு படகு சேவையில் ஈடுபடுத்தப்படும் எனப் பிரதேச செயலர் தெரிவித்தார்.(112)

## சந்நிதிக்குச் சென்றவர் விபத்தில் சிக்கிக் காயம்

(வடமராட்சி)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்துக்கு சைக்கிளில் சென்ற முதியவர் இராணுவ வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி ஆலயத்திற்குச் சென்றுகொண்டிருந்த வேளை, குஞ்சர்கடைப் பகுதியில் இவர் இராணுவ வாகனத்துடன் மோதுண்டு காயமடைந்தார்.

கரவெட்டி கிழக்கை சேர்ந்த நல்லதம்பி கனகசபை (வயது 73) என்பவரே காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

(23)

## வாடகைக் கொள்வனவு அடிப்படையில் விவசாயிகளுக்கு உழவு இயந்திரம்

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 5 விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு - கமநல சேவை நிலையத்தினூடாக தலா ஒரு உழவு இயந்திரம் வீதம் வழங்கும் வைபவம் 30ஆம் திகதி யாழ். கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றது.

விவசாயிகளை ஊக்கப்படுத்தும் நோக்கில் 4 இலட்சம் ரூபா பெறுமதியான உழ்வு இயந்திரம், முப்பதாயிரம் ரூபா உடனடிப் பணமாகவும் மிகுதி 36 தவணைகளில் நாலாயிரம் ரூபாப்படி செலுத்தும் வகையில் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. (25)

# 75 சதவீதமான அரச ஊழியர்கள் லஞ்சம் வாங்குகின்றனராம்!



## ஜனாதிபதி சந்திரிகா குற்றஞ் சாட்டுகிறார்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களில் 75 சதவீதமானோர் லஞ்சம் வாங்குவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார். கண்டி தர்ம ராஜ கல்லூரியில் நடைபெற்ற, மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் வைபவத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சில பாடசாலைகளின் அதிபர்கள், மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக லஞ்சம் வாங்குகிறார்கள் எனத் தெரிவித்த ஜனாதிபதி, தான் அரச சேவையில் ஈடுபட்டிருந்த காலத்தில் 10 தொடக்கம் 15 சதவீதமான அரச ஊழியர்கள் லஞ்சம் பெற்றதாகவும், இப்போது இது 75 சதவீதமாக உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அரச ஊழியர்கள் அனைவரும் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாத அரச ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். ஒழுங்காக கடமைகளை நிறைவேற்றாத அதிபர்கள், ஆசிரியர்கள குறிததுத தமகககு அறிவிககபபடடால உாிய நடவடிககை எடுககபபடுமென ஜனாதிபதி சநதிாிகா மேலும தெரிவித்துள்ளார்.

# இலங்கையின் பொருளாதாரத்தை 10 மாதங்களில் மீளக் கட்டியெழுப்பலாம்

## நிதி அமைச்சு நம்பிக்கை

(கொழும்பு)

2003ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் பாரிய அபிவிருத்தி முயற்சிகள், தொழில் வாய்ப்புகள், அரச ஊழியருக்கான சம்பள உயர்வுகளை உள்ளடக்கியதாக இருக்கும் என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்செயற்திட்டங்கள் மேலும் விஸ்தரிக்கப்படும். அத்துடன் மோசமாக வீழ்ச்சி கண்டிருந்த இலங்கையின் பொருளாதாரத்தை அடுத்த 8 முதல் 10 மாதங்களுக்குள் மீளக்கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும் என்றும் நிதியமைச்சு நம்பிக்கை தெரிவித்திருக்கின்றது.

கிராமிய, நகர அபிவிருத்தி திட்டங்களை உள்ளடக்கியதாக 2003 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாளை மறுநாள் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(01)

### மீசாலையில் எச்சரிக்கப்பட்டு விடுவிப்பு

(மீசாலை)

மீசாலைச் சந்திக்கு அண்மையில் உள்ள மாவடிப் பிள்ளையார் ஆலய வீதியில் நின்று அடாவடித்தனம் புரிந்தவர்கள், கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களினால் எச்சரிக்கை செய்து விடுதலை செய்யப்பட்ட சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

(25)

## மோட்டார் சைக்கிளில் வந்தோரால் பெண்ணின் சங்கிலி அபகரிப்பு

இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் - வீதியால் தனியே நடந்து சென்றுகொண்டிருந்த பெண்ணைத் தாக்கிவிட்டுக் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் சங்கத்தானையிலுள்ள மருதடி எனும் இடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சனநடமாட்டம் குறைந்த இவ்விடத்தில் நீண்ட நேரமாகக் காத்திருந்த இருநபர்களே - அப்பகுதியைச் சேர்ந்த மகேஸ்வரி என்பவரைத் தாக்கிவிட்டு, சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

(30)

## வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மின்விநியோகத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப்பகுதிக்கு மின்சார விநியோகம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி யாழ. அரசாங்க அதிபரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கு இதுவரை எதுவித முயற்சியும் எடுக்கப்படவில்லை என்றும் அம்பன் பகுதிக்கு மின்விநியோகத்துக்கென ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அந்த நிதி பயன்படுத்தப்படவில்லை என்றும் அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக அப்பகுதிக்கான பங்குத்தந்தை வண. பிதா அன்ரனி ஜெ.சுதாகர் அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

(23)

## சின்னஞ்சிறு செய்திகள்

### சிஹல உறுமய மத்திய குழுவில் கொட்டகதெனிய

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.எம்.பி.ஜி.கொட்டகதெனிய சிஹல உறுமயவில் மத்திய குழு உறுப்பினராக இணைக்கப்பட்டுள்ளார்.

இதற்கான முடிவை மத்திய குழு கூடி, முடிவெடுத்துள்ளது.

சிஹல உறுமயவில் இணைந்த பின்னர் இவர் முதன்முதல் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு நேற்று இடம்பெற்றது.

### 'மெய்வண்ணம்' சஞ்சிகை வெளியீட்டுவிழா

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயத்தில் சுகாதார உடற்கல்வி மன்றத்தின் 'மெய்வண்ணம்' சஞ்சிகை நூல் வெளியீட்டு விழா நாளை பி.ப 2 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது

### சொதிச்சட்டியில் வீழ்ந்த சிறுவன் காயம்!

(வடமராட்சி கிழக்கு)

நவிண்டில் பகுதியில்,கொதிக்கும் சொதிச்சட்டியில் வீழ்ந்த 3வயதுச் சிறுவன் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆர்.தவேந்திரன் என்ற சிறுவனே முகம் உட்பட உடலின் பல பகுதிகளிலும் காயமுற்றநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(17)

### கோப்பாயில் இன்று தடகளப் போட்டி

(கோப்பாய்)

தீபாவளி தினத்தை முன்னிட்டு கோப்பாய் கண்ணகை அம்மன் சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் தடகள விளையாட்டுப்போட்டி இன்று பி.ப. 1 மணிக்கு ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகப் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன், விவசாயபீட விரிவுரையாளர் கு.திருக்குமரன் ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர்.

### குன்றும்குழியுமாக வேம்படி வீதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதனால் அவ் வீதியூடாக வரும் வாகனங்கள் மாணவர்கள், பயணிகள் மீது சேற்று நீரை வாரி இறைத்து வருகின்றன. இதனால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். (29)

### பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொள்ளச் சென்ற வயது குறைந்த சிறுவனை அரசியல் துறையினர் நேற்றுமுன்தினம் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மவுண்ட் கார்மல் வீதியைச் சேர்ந்த பொனிஸ் கனிபல் றொசான் என்ற 16 வயதுச் சிறுவன் அரசியல்துறையின் பிரமுகரான கந்தம்மானால் நேற்றுமுன்தினம் மாலை பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

### தீபாவளி நல்லாசி

(யாழ்ப்பாணம்)

யுத்த இருள் அகன்று, சமாதான ஒளி ஏற்றி, தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் அனைவருக்கும் சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளது.

உலகவலம்

# காஷ்மீர் போராளிகளுடன் போர் நிறுத்தம்; புதிய முதல்வர் சயீத் அழைப்பு விடுத்தார்!


சயீத்தின் கொடும்பாவியை எரிக்கும் அவரின் எதிர்ப்பாளர்கள்

(சிறி நகர்)

காஷ்மீரைத் தனி நாடாக்கப் போராடும் முஸ்லிம் போராளிகளுடன் போர் நிறுத்தம் ஒன்றைச் செய்யத் தயாராக இருப்பதாக காஷ்மீரின் புதிய முதலமைச்சர் முப்தி முஹமட் சயீத் அறிவித்துள்ளார்.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகத் தொடரும் ஆயுத வன்முறைகளில் இதுவரை 30 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ள காஷ்மீரில் மீண்டும் அமைதியைத் தோற்றுவிக்கத் தான் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்தவாரம் நடைபெற்ற போராளிகளின் தாக்குதலொன்றில் முதல்வர் சயீத்தின் கூட்டரசாங்கத்தின் முக்கிய பங்காளியான முஹமட் சிக்கந்தர் கானும், இரண்டு பொலிசாரும் கொல்லப்பட்ட பின்னர் இந்த அறிவித்தல் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை-

காஷ்மீரில் சிறை வைக்கப்பட்டுள்ள முஸ்லிம் போராளிகளில், பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாதிருக்கும் அனைவரையும் விடுவிக்கவுள்ளதாகவும் முதல்வர் சயீத் அறிவித்துள்ளார்.

சயீத்தின் இந்த அறிவிப்புக்கு முன்னராக - 1989இல் அவரது மகளைக் கடத்திச் சென்ற போராளிக் குழுத் தலைவர்களில் ஒருவரான- ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி (ஜே.கே.எல்.எவ்)யின் ஷோகற் பக்ஷி கடந்த வெள்ளிக்கிழமை யன்று 12 வருடம் சிறை வாசத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


முப்தி முஹமட் சயீத்

## அவமதிக்கப்பட்ட 'புக்கர்' பரிசாளர்!

(லண்டன்)

உலகப் புகழ்மிக்க கனேடிய எழுத்தாளரான ரோகிதன் மிஸ்றி அமெரிக்காவிற்கான தனது இரண்டாவது சுற்றுலாவை இடைநடுவில் கைவிட்டுள்ளார். அமெரிக்க விமான நிலையத்தில் மிஸ்றியும் அவரது மனைவியும் தீவிரமாக பரிசோதிக்கப்பட்டதன் காரணமாகவே மேற்படி தனது சுற்றுலாவை இடைநடுவில் கைவிட்டுள்ளதாக தெரியவருகின்றது.


மிஸ்றி

'கனேடிய குளோப்' செய்தி நிறுவனத்திற்கு ரோகிதன் மிஸ்றி கருத்துத் தெரிவிக்கையில் - "மிகவும் அவமானகரமான விடயம்' எனத் தனக்கு அமெரிக்க விமான நிலையத்தில் ஏற்பட்ட அனுபவம் தொடர்பாக தெரிவித்தார். ரோகிதன் மிஸ்றி இவ்வருடத்தின் 'புக்கர் விருது'க்கான எழுத்தாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், மனிதாபிமானமற்ற முறையில் உபசரிக்கப்பட்ட விடயம் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

ரோகிதன் மிஸ்றி இந்தியாவில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக் மீதான தாக்குதலுக்காக ஆபிரிக்காவும் ஒரு தளமாகிறது!

## அமெரிக்கப் படைகள் நூற்றுக்கணக்கில் குவிப்பு

(வொஷிங்டன்)

ஆபிரிக்கக் கண்டத்தின் முனையில் - அமெரிக்கா தனக்கான இராணுவத் தளமொன்றை ஏற்படுத்தியுள்ளது.


அமெரிக்கா பெரிதும் நம்பியிருக்கும் அதிநவீன ஸ்ரெல்த் விமானம்.

இதனை உறுதி செய்துள்ள அமெரிக்கப் படையதிகாரிகள் - ஈராக்கிற்கு எதிரான தாக்குதலுக்கான தயார்ப்படுத்தலில் இத்தளம் முக்கிய பங்கினை வகிக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்க முனையான டிஜேபோட்டியில் இதுவரை நூற்றுக்கணக்கான அமெரிக்க இராணுவ மற்றும் விசேட படையணிகளின் படையினர் நிலைகொண்டுள்ளனர்.


ஆபிரிக்க முனைப்பகுதியில் அமெரிக்கக் கடற்படை.

ஆபிரிக்கப் பகுதியில் தனது நிலையை வலுப்படுத்துவதன் மூலம் முஸ்லிம் தீவிரவாத்தை நேரடியாக எதிர்கொள்ளும் நிலைக்கு அமெரிக்கா தன்னைத் தயார்ப்படுத்துவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

இதேவேளை -

இன்னும் ஒரு சில வாரங்களில் கட்டார் பகுதியில் அமெரிக்க இராணுவம் தனது போர்ப்பயிற்சிகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இஸ்ரேலிய கடும்போக்காளர் பாதுகாப்பு அமைச்சரானார்

(ரெல் அவிவ்)

இஸ்ரேலின் முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் ஷாகுல் மோவ்வாஸ் - பாதுகாப்பு அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.

பலஸ்தீனர்களுக்கு எதிரான கடும் போக்காளராகக் கடந்த காலங்களில் தன்னை இனங்காட்டிக் கொண்ட மோவ்வாசை தனது அமைச்சரவையில் சேர்த்ததன் மூலம் - பிரதமர் ஏரியல் ஷரோன் புதிய நகர்வொன்றை ஆரம்பித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொழிற்கட்சியின் ஆதரவை இழந்துள்ளதால், ஏற்பட்ட பலவீனமான அரசியல் நிலையைப் பலப்படுத்த ஏரியல் ஷரோன் எடுத்துள்ள இம்முடிவு, இஸ்ரேலிலும் சர்வதேச அளவிலும் வாதப்பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ளது.


படைவீரர் மத்தியில் மோவ்வாஸ்


ஷரோன்

# பாலித்தீவு குண்டுவெடிப்பின் சந்தேகநபர் அவுஸ்திரேலியாவுக்கு பலமுறை வந்தவர்!

(மெல்போன்)

இந்தோனேசிய இஸ்லாமிய தீவிரவாத தலைவர் அபு பைதாஸ் பா-ஹார் பதினொரு தடவைகள் அவுஸ்திரேலியாவிற்கு வருகை தந்துள்ளதாக அவுஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது. அபு பைதாஸ் பா-ஹார், இஸ்லாமிய தீவிரவாத இராணுவ அமைப்பான 'ஜம்மா இஸ்லாமியா' இயக்கத்தின் தலைவராவார். அவர், அவுஸ்திரேலியாவில் தனது அமைப்பினை விஸ்தரிப்பதற்கானதும் ஊடுருவுவதற்குமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அவுஸ்திரேலிய அரசு அவர் மீது குற்றம் சுமத்தியுள்ளது.

அவுஸ்திரேலிய இராணுவ உளவுத் துறையினர் சில இஸ்லாமியர்கள் இஸ்லாமிய தீவிரவாத்துடன் தொடர்புடையவர்கள் என இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவுஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளது.

பாலித்தீவுகளின் குண்டு வெடிப்புக்களைத் தொடர்ந்து 'ஜம்மா இஸ்லாமியா' அமைப்பின் தீவிரவாத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுத்துள்ளதாக அவுஸ்திரேலிய அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.


பா-ஹார்

# நில நடுக்கத்தில் 26 சிறார்களை பலிகொடுத்த சோகத்தில் இத்தாலி!

## 8000 பொதுமக்கள் இன்னமும் வீடுகளுக்குத் திரும்பவில்லை

(ரோம்)

இத்தாலியில் நிலநடுக்கமொன்றில் கொடூரமாகப் பலியான - 26 சிறுவர்களின் துயரத்தால் இத்தாலி முழுவதும் சோகத்திலாழ்ந்துள்ளது.

'சன் ஜியுலியானோ டீ புக்லியா' என்ற இக்கிராமத்தில் - நடந்த இந்த இயற்கை அனர்த்தத்தில் கொல்லப்பட்ட சிறார்களின் உடல்களுக்கு மக்கள் நாடிச்சென்று அஞ்சலி செலுத்துகின்றனர்.

இறந்த சிறுவர்களின் உடல்கள் வைக்கப்பட்டிருக்கும், பிரேதப்பெட்டிகளுக்கு முன்னால், அவரவரின் பாடசாலைப் பைகள், உதைபந்தாட்டச் சீருடைகள், விளையாட்டுப் பொருட்கள், குடும்பப் புகைப் படங்கள் என்பன வைக்கப்பட்டிருப்பது கல்நெஞ்சையும் கரைய வைப்பதாக உள்ளது.

இந்தச் சிறார்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள - இத்தாலிய ஜனாதிபதி, கார்லோ அசேக்லியோ சியாம்பி - சம்பவம் நடைபெற்ற கிராமத்திற்கு வரவிருக்கின்றார்.

இந்த நிலநடுக்கச் சம்பவத்தைத் தொடர்ந்து - அச்சத்தினால் இடம் பெயர்ந்த மக்கள் இன்னமும் - தற்காலிகக் கூடாரங்களிலேயே வசித்து வருகின்றனர்.

ரிச்டர் அளவுகோலில் 5.4 எனப் பதிவாகியுள்ள இந்த நில நடுக்கத்தால் - 8000 பொதுமக்கள் இடம்பெயர்ந்திருப்பதாக மீட்புப்பணியாளர்கள் அறிவித்துள்ளனர்.


பலியான சிறார்களின் புத்தகப் பைகள்


தொடரும் கூடார வாழ்வு



# இலக்கியச் சோலை

## A-9 என நீளும் நினைவுகள்

பகுதி நான்கு



வந்த 'யாழ் - தேவி'...'வவுனியா - தேவியாய்'
மாறிப் பாதியில் முகத்தைத் திருப்பிற்று.
இந்தப் பக்கத்தில்...., 'தண்டவாளம்' எனில்
என்ன? என்றொரு கேள்வி பிறந்தது.
அந்த மாதிரி வீதி.... பின் எண்ணையே
அற்ற தலையென மண்ணாகிப்போனது.
எந்த நேரமும் உயிர்த்த தெரு.... சேடம்
இழுக்கத் தொடங்கியே 'கோமா'விலாழ்ந்தது

வன்னி என்னும் வணங்கா மடியதன்
வயிற்றினை இரு துண்டாய்ப் பிளந்தூர்ந்து
சென்ற வீதியில் மட்டும் உயிர் கொஞ்சம்
சேமிக்கப்பட்டு கிடந்தது. யாழ் வரை
குண்டு குழியாகப் புண்பட்ட வீதியில்
குருதி அடிக்கடி தேங்கத் தொடங்கிற்று.
அந்நியர்களின் காலடிக் கீழ்.....ஒரு
அறுகம் புல்லாய்க் கசங்கிற்று A-9

'அயல் நிலத்தின்' பச்சை உடுப்புக்கள்
அமர்ந்திருந்து.... இப்பாதையின் ஊடுதான்
முயன்று பார்த்தன காட்டைக் குடித்திட!
முட்டி மோதின வேட்டை நடத்திட!
துயரை மூச்சுத் தணலாற் பொசுக்கிய
'தூயரை' வன வேர்களே காத்தன!
பயந்தரண்டு 'சகுனிகள்' ஓடின!
பாதையோரம் பாதீனியந் தூவின!

- ஜெயங்கொண்டான்

## இருப்பு (?)

இளமையை நாடி
வசந்தத்தை தேடித் தொடு முன்னரே
என் வாழ்க்கை தொலைந்து போனது!
வாழ்வு வெறுத்து விட
மரணம் மகிழ்ச்சிக்குரியதாயிற்று:
பொறுமை பொசுங்கிப்போனது:
தவிக்கும் என் உயிர்
இன்னமும் வாழ்வின்
தாகத்தோடு ...!
நான் தேடும்
உயிர்ப்(பூ)பு என்னில்
எப்போது?
எனக்கே சொந்தமாய் ...!
நான் வாடி உதிர்ந்த மலர்?
என்னில்
இப்போது வசந்தமில்லை
வாசமுமில்லை ..!

- செந்தூரி -

நன்றி
அம்பலம் - செப்.2002

# உள்வெளி



நமது யாழ்.மண்ணில் நாளேடுகள் வெளிவரத் தொடங்கி மக்கள் மத்தியில் நிலை பெற்றுவிட்டன, இலங்கையில் பிரதேச ரீதியிலான நாளேடு முதலில் தோற்றங்கொண்ட பெருமையும் யாழ்ப்பாணத்திற்கே உரியது!

இவற்றை விட கலை-இலக்கியம், சமூக-பொருளாதாரம், அரசியல், பொது அறிவு போன்ற விடயங்களிற்காகத் தனியாக சிறு சஞ்சிகைகளும் வெளிவந்துள்ளன. தனிநபர் அல்லது குழுவொன்றினால் வெளியிடப்பட்டு, குறைந்த எண்ணிக் கையினரைச் சென்றடைந்தாலும் தாம் மையப்படுத்திச் செயற்பட்ட துறைகளில் - குறிப்பிடத்தக்க விதத்தில் - சமூகத்தின் முன்னோக்கிய அசைவிற்கு அவை பங்களித்துள்ளன. அறுபதுகளிலிருந்து பார்த்தால் கலைச் செல்வி, வசந்தம், மல்லிகை, விவேகி, இதயம், தாயகம், அலை, சிரித்திரன்,சமர், புதுசு, துளிர், தாகம், நான், உள்ளம், அமிர்தகங்கை, நுண்ணறிவு, கலைமுகம், ஆற்றுகை முதலிய சிறு சஞ்சிகைகள் நினைவுக்கு வருகின்றன...

இடைநடுவில் சில நின்று போனாலும், புகழ் பெற்ற ரஷ்யக்கவிஞன் 'அந்திரேஸ் ஊநெசன்ஸ்கி' யின் "வெற்றிடங்களை இயற்கை விடுவதில்லை" என்ற கவிதை வரியினைப்போல, வேறொன்று தோன்றியபடிதான் இருந்தது.

ஆயினும், 1995 இடம்பெயர்வின் பின், சிறுசஞ்சிகை வெளியீட்டில் ஒருவித மந்த நிலைமையே காணப்படுகிறது. 'நான்', 'தாயகம்' ஆகிய இரண்டு சஞ்சிகைகளே வந்து கொண்டுள்ளன; புதிதாக இரண்டு சஞ்சிகைகள் அண்மையில்தான் வந்துள்ளன!

இருவருட இடைவெளியின் பின், 'மனிதம் கலந்தாய்வுக் குழு' வினால் வெளியிடப்படும் 'ஆத்மா' சஞ்சிகையின் 12ஆவது இதழ் வெளிவந்தது; தற்போது 13 ஆவது இதழ் வந்துள்ளது. 1/4 கிறவுண் அளவில் சிறிய பத்திரிகை போன்ற வடிவத்தில், 12 பக்கங்களில் உள்ள 'ஆத்மா' வித்தியாசமான தொன்று; பொது வாசகனிடம் எடுத்துச் செல்வதற்கும் பொருத்தமானது. "…. ஈழ விடுதலையில் பொருளாதார, அரசியல், சமூக, வர்க்க வேறுபாடுகளை சமத்துவம் நோக்கியும் நகர்த்த வேண்டியிருக்கிறது. பொது எதிரியுடனான போராட்டம் முடிவுறும் வேளையில் இவைகளுக்கான தீர்வுகளும் அடிபட்டுச் சென்று விடும் அபாயம் உலக விடுதலைப் போராட்டங்களில் நடந்தது போல, எமது ஈழப்போராட்டத்திலும் நடந்து விடக்கூடாது" என்பன அதன் தலையங்கத்திலுள்ள வரிகள். சமூகம், அரசியல் சார்ந்த விடயங்களோடு இலக்கிய விடயங்களும் இந்த 13 ஆவது இதழில் இடம்பெற்றுள்ளன.

சமூகச் செயற்பாட்டாளரும், 'ஒளியை நோக்கி' என்னும் சிறு சஞ்சிகையினை தமிழில் வெளியிடுபவருமான 'யூட் லால்' என்ற சிங்களக் கத்தோலிக்க மதகுருவின் நேர்காணல், இவ்விதழின் சிறப்பம்சமாகும். உண்மையும் நேர்மையும் செயற்பாடுங்கொண்ட ஓர் ஆன்மீகவாதியின் குரல், இந்த நேர்காணலில் தெளிவாக ஒலிக்கிறது!

"நீதியின் மீதும் சத்தியத்தின் மீதும் கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறது. தமிழரின் விடுதலைப் போராட்டத்தின் பின்னர்தான் சுய ஆட்சி, சுயநிர்ணய உரிமை போன்றவற்றுக்கான அர்த்தங்களை நான் புரிந்து கொண்டேன். பெரும் சவால்கள், அச்சுறுத்தல்கள் மத்தியில் நாம் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

...தென்பகுதியில் இருக்கும் பௌத்தம் மற்றும் கிறிஸ்தவ மதபீடங்கள் தமிழர்களின் பிரச்சினையை நியாயபூர்வமாக ஏற்றுக்கொண்டு, அதற்கான தீர்வை வழங்க எப்போதும் தயாராக இருந்ததில்லை. மாறிமாறி ஆட்சிக்கு வரும் இரு கட்சிகளுங்கூட அவ்வாறுதான்" என்பவை, அவரது கருத்துக்களிற் சிலவாகும்.

'போரின் குழந்தைகள் - உளவியல் நோக்கு', 'பண்பாடு + ஆணாதிக்கம் = பெண்', 'அமெரிக்கா கண்ட வியட்நாமும் தென்மராட்சியும்', "நடக்கத் தொடங்கினதே ஜெய்ப்பூர் காலிலதான்" என்ற தலைப்புக்களிலான கட்டுரைகளுடன், சுமை தூக்கும், தொழிலாளரின் அவலங்களை விளக்கும் 'மறுபக்கம்', இளங்கவிஞர்களுக்குரிய 'புதிய வயல்' ஆகிய பகுதிகளும் இடம்பெற்றுள்ளன. "கழுகு ஒன்று / வெள்ளை வர்ணத்தில் / தோய்ந்து பறக்கும் / பயங்கரக் கனவு ஒன்றைக் காண்கிறேன் / ஆசீர்வாதங்களுடன்/ அழகாகப்பறந்து வருகின்றது அது / அந்தக் கழுகிடம் / ஒரு பாசிச அரசு இருக்கிறது / வானொலி இருக்கிறது / ஆயுதம் இருக்கிறது / கறுப்புப் படை இருக்கிறது" என்பன, ஒரு கவிதையிலுள்ள வரிகளிற் சில!

தனி இதழ் ரூபா 5/=; பன்னிரண்டு இதழ்களிற்கான சந்தா ரூபா 80/=; முகவரி: 'ஆத்மா', 1/7, மடம் வீதி, யாழ்ப்பாணம்.

o o

"...எம் மண்ணிலிருந்து - யாழிலிருந்து இப்பொழுது இலக்கியச் சுருதி மீட்டப்படவேயில்லை! அதனால்தான் மூத்த எழுத்தாளர் என்று சொல்வோர் கூட முயற்சிக்காத பணியில் இந்த விடலைகள் இறங்கியுள்ளோம்" என்ற வரிகளைக் குறிப்பிட்டு ஓகஸ்ற் மாதம் வெளிவந்த 'அம்பலம்' சஞ்சிகையின் இரண்டாவது இதழ் த.பிரபாகரன், கு.லக்ஷ்மணன் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு, தற்போது வெளிவந்துள்ளது.



மூத்த எழுத்தாளர்கள் 'மணிவிழா'க்களிலும் 'பவளவிழா'க்களிலும் மூழ்கியிருக்கையில் இந்த இளைஞர்களின் முயற்சி வரவேற்று ஊக்குவிக்கத்தக்கது!

இந்த இரண்டாவது இதழில் 10 கவிதைகள், ஒரு சிறுகதை, ஒரு 'துளிக்கதை', 4 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 'பிசாசுகளின் நிறம் கறுப்பு', 'உன்னைப் பற்றிய ஞாபகங்கள்' ஆகிய கவிதைகள் கவனிப்பைப் பெறுகின்றன. 'அன்றும் இன்றும்' என்ற கவிதைப்பகுதி நல்லதோர் முயற்சி; ஆனால், 'அன்றும்' என்பதின் கீழ் வெளியிடப்பட்ட கவிதையை எழுதியவர் 'மஹாகவி' என்பதோ, கவிதையின் தலைப்பு 'யாழ்ப்பாணம் செல்வேன்' என்பதோ குறிப்பிடப்படவில்லை! பொதுவில், கவிதைத் தேர்வில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

த.பிரபாகரனின் 'அம்மாவும் ஆட்டுக்குட்டியும்' என்ற சிறுகதை பேச்சு வழக்கில் தெளிவாகச் சொல்லப்பட்ட கதை. இறுதிப்பகுதியில் 'அம்மா மாதிரித்தான் தாயர்ரும்' என்பதை 'வெளிப்படையாக' விபரித்தல் தவிர்க்கப்பட்டிருந்தால், கதை மேலும் சிறப்புற்றிருக்கும்.

எமது பாரம்பரிய அடையாளங்களை அழிய விடாது பேண வேண்டுமென்ற ஆதங்கத்தை 'மின்னலிற் தெரிந்தவை' கட்டுரையில் 'ஆதங்கன்' வெளிப்படுத்தியுள்ளமை கவனத்திற்குரியது.

'பாபா ஒரு பார்வை' என்ற திரைப்பட விமர்சனம் மேலும் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்; பல இடங்களில் மயக்கங்களையும் முரண்பாடுகளையும் அது கொண்டுள்ளது!

"...'இலக்கியக் கனதி' என்ற இலக்குப்பற்றியும் அதிக அக்கறை கொள்வதால் கனதியான படைப்புக்களை புதிய, பழைய ஆக்ககர்த்தாக்களிடம் 'அம்பலம்' வேண்டுகின்றது" என்றும் ஓரிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எமது பிரதேசத்தில் தரமான சஞ்சிகை வளர்ச்சியில் அக்கறை உள்ள யாவரும், இந்த இளைஞர்களிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்!

தனி இதழ் ரூபா 15/=; ஆண்டுச்சந்தா 180/=
முகவரி : 'அம்பலம்', 305, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

- சூரி -

# ஜான் பாரி
# வானொலி தொழில்நுட்பவியலாளர்
# யூ.எஸ்.இராணுவ விமானப்படை
# என்ஹா றாங்
# டிசெம்பர் 1962 ஒக்டோபர் 1963

சென்றவாரத் தொடர்ச்சி..

..அதுதான் நான் வேலை செய்யத் தொடங்கியபோது கிடைத்தது. நாங்கள் ஒரு வேலைக்காரனை வைத்திருப்ப தற்கேற்ப மனவிசாலம் அல்லது அதிக பொருள் வளமிருக்க வேண்டும்.

சில ஆட்கள் கர்வம் மிகுந்த வர்களாக வேலைக்காரர்களுக் குக் கட்டளையிடுவார்கள். சில ஆட்கள் இரக்க சுபாவமுள் ளவர்

## "உறங்காத உண்மைகள்"

### காலை ஒன்பது முதல் மாலை ஐந்து வரையான போர்

களாக, வேலைக்காரப் பெண்ணு டைய குடும்பநிலைமை என்ன வென்பதை அறிந்து அவர் களுக்கு உதவமுயற்சிப்பார்கள். சிலவேளைகளில் வீடுகளுக்குச் சென்று குழந்தைகளைப் பற்றி அறிவதோடு, அவர்களுடன் தனிப் பட்ட முறையில் அதிக ஈடுபாட் டுடன் பழகுவார்கள். வேறு சிலர் இரண்டிற்கும் இடைப்பட்ட நிலை யில் நிலைமைக்கேற்ப சமாளிப் பதுடன் தங்களுடைய வழமை யான இராணுவக் கடமைகளில் கவனமெடுப்பதற்கு, யாரோ ஒரு வர் இருப்பதையிட்டு மகிழ்ச்சியு றுவர். மினுக்குவது போன்ற அற்ப வேலைகளை நாம் செய் யத்தேவையில்லை. யாரோ ஒரு வர் எங்களுக்காகச் செய்யப் போகிறார்கள். அவை போன்ற சந்தர்ப்பங்களில் அநேக ஆட்க ளுக்கு எந்தவித வரலாற்று ரீதி யான நோக்குமில்லை. இதைப் பற்றிச் சிந்திப்பதுமில்லை. நான் இதைப்பற்றிச் சிந்தித்தேன் எனென் றால் இராணுவத்தில் விசேட அக்கறை கொண்டிருந்தேன். அதை எனது தொழிலாகக் கொள்ள விரும்பி, இந்தியாவிலுள்ள பிரித் தானிய இராணுவத்துடனும், இந் தோசீனாவிலுள்ள பிரெஞ்சு குடி யேற்ற நாட்டு இராணுவத்துடனும் தொடர்பேற்படுத்தத் தொடங்கி னேன். நாங்கள் இருக்கின்ற இரா ணுவத்தளம் முன்பு செங்கற்க ளால் கட்டப்பட்ட பெரிய கட்ட டங்களுடன் பிரெஞ்சுத் தளமாக இருந்ததென்று துண்டும் துணுக் குமான செய்திகளைக் கேட்டிருந் தேன்.

எங்களுடைய பிரிவுக்குப் பொறுப் பான மொழி பெயர்ப்பாளருடன் இதைப்பற்றிக் கதைப்போம். அங்கு பிரெஞ்சு இராணுவம் எப் பொழுது இருந்ததென்றும், அநே கமானவர்கள் ஜேர்மன் மொழியே பேசினார்கள் என்பது பற்றியும் அவர் கதைப்பார். அவர்கள் ஏன் ஜேர்மனியமொழி பேசினார்கள் என்று கேட்டோம். உலகப் போர் இரண்டின் பின்பு அவர்கள் ஜேர் மன் இராணுவத்திலிருந்து பிரெஞ்சு அந்நியப் பெருஞ் சேனைக்கு வந்து சேர்ந்தார்கள் என்று கூறினார். ஆகவே அவ ரால் ஜேர்மன், பிரெஞ்சு, ஆங்கில மொழிகளைப் பேசமுடிகின்றது அவர் சீன மொழியின் மூன்று பிரதேச மொழிகளையும் நிச்சய மாக வியட்நாமிய மொழியும் பேசு வார். இந்த அமெரிக்க இரா ணுவப் பிரிவின் மொழிபெயர்ப்பா ளராக இந்த மனிதன் மதிப்பிட முடியாத வேதனத்தைப் பெறு கின்றார். மிகவும் பண்பான மனி தன், அவர் தன்னுடைய நாட் களை தனிப்பட்ட முதல் வகுப் பாளருடனும், நாலாம் வகுப்பு நிபுணத்துவர்களுடனும் தான் கழிப்பார், அவருக்கு உயர் தர பாடசாலைக் கல்வியே கற்காத வர்கள் உத்தரவிடுகிறார்கள்.

எங்களில் இரண்டு அல்லது மூன்று பேர்தான் அவரைப்பற்றி நன்கு அறிந்துள்ளோம். ஒரு நண்பர் ஜேர்மன்காரர். அவரு டைய தந்தை ஜேர்மன் இராணு வத்தில் கொல்லப்பட்டார், அதன் பின்பு அவருடைய தாய் ஒரு அமெரிக்கப் படைவீரரைத் திரும ணம் செய்தார். அவருடன் ஐக் கிய அமெரிக்காவுக்கு (US) வந் தார். என்னுடைய நண்பர் அவ ருடன் ஜேர்மன் மொழியில் பேசி பிரெஞ்சு அந்நிய பெருஞ்சேனை யின் பழைய வரலாற்றை அறிந் தோம்.

அத்துடன் நாறாங்கிலிருந்து சைகோனுக்கு பயன்படுத்தும் தொலைபேசிக் கம்பிகள் ஜப்பா னிய இராணுவத்தால் அமைக்கப் பட்டன் என்பதையும் நான் அறிந்து கொண்டேன். நாறாங்கிலுள்ள குடாவிலிருக்கும் ஒரு பழைய ஜப்பானிய விமானம், சுட்டு வீழ்த் தப்பட்டதென்று யாரோ ஒருவர் கூறினார். இந்த இடத்தைப் பற் றியும் இந்த வரலாற்றைப் பற் றியும் நாங்கள் ஒரு உணர்வைப் பெறத் தொடங்கினோம், அத்து டன் இந்த மக்கள் இராணுவங் கள் வருவதையும் போவதையும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாங் களும் அவற்றில் மற்றொன்று. வியட்நாமிய மாணவர்களுடன் எனக்கு ஏற்பட்ட சந்திப்புக்களை என்னால் நினைவு கூர முடியும். அவர்கள் என்னைக் கடற்கரை யில் நிறுத்துவார்கள். ஒரு பின் னேரம் அல்லது ஒரு வாராந்தர விடுமுறை எங்களுக்கு கிடைத் தால், அது ஒரு நல்ல நாளா கும். ஒரு அரை மைல் தூரம் நாங்கள் கடற்கரைக்கு நடக்க முடியும். துவாயை விரித்துவிட்டு, இந்த உஷ்ண வலய குடாவில் உருண்டுவரும் அலைகளைக் கண்டு கழிப்போம். கடற்கரைக ளில் பிரெஞ்சுக்காரர் நாட்டு மாளி கைகளைக் கட்டினார்கள். அது அத்திலாந்திக் நகரம் ஒன்றில் யுத்தத்தின் மத்தியில் நிலை கொண்டிருப்பதற்கு ஒப்பான தாகும்.

பிரதான கடற்கரை வீதியில் மாணவர்கள் தங்களுடைய சைக் கிள்களில் வருவார்கள், அல்லது கடற்கரை வழியாக நடந்து வரு வார்கள். எங்களுடன் சம்பாசிக்க முயற்சிப்பார்கள், அவர்களு டைய ஆங்கிலத்தைப் பேசிப் பாருங்கள். உடனடியாக அல் லது சற்றுத் தாமதித்து சுற்றிச சுழன்று தாங்கள் லிங்கனைப் பற்றி வாசிப்பது பற்றியும் ஜெபர்ச னைப்பற்றி வாசித்துக் கொண்டி ருப்பது பற்றியும், சுதந்திரப் பிர கடனம் பற்றியும் கூறுவார்கள். இவை எல்லாம் பெரிய விடயங் கள் என உணர்ந்தார்கள். "நான் ஒரு கிறிஸ்துவன், நான் ஒரு மாணவன்" என அடிக்கடி கூறிக் கொண்டு, உணர்ச்சிவசப்பட்டவர் களாக, கதைக்க விரும்புபவர்க ளாக பேசத் தொடங்குவார்கள் ஆனால் உரையாடலின் ஒரு கட் டத்தில் "ஆனால் உங்களுடைய இராணுவம், உங்களுக்குத் தெரி யும்" என்பது போன்ற குறிப்பிடப் படாத வினாவொன்று வரும். சுதந் திரப் பிரகடனத்திற்கும் அதற்கும் என்ன தொடர்பு?. ஏனென்றால் அவர்களுக்குத் தெரியும், நாங் களும் அறியத் தொடங்கிவிட் டோம். அதாவது சைக்கோன் அரசு ஒரு பொலிஸ் அரசாகும். அங்கு மூன்று ஆட்கள் ஒன்று சேர்வது சட்டவிரோதமானதாகும், அவர்களுடைய சொந்த பொலிஸ் காரராலேயே மிக நெருக்கமாக அவதானிக்கப்படுகிறார்கள்.

பின்பு இவை போன்ற விநோ தமான விடயங்கள் சம்பவிக்கும், என்னுடைய ஜேர்மன் நண்பர் நன்றாக டென்னிஸ் விளையாடு வார். ஆகவே மொழி பெயர்ப்பா ளர் மூலமாக இவர் டென்னிஸ் விளையாட்டுக் கழகங்களுக்கு அழைக்கப்படுவார். அங்கு நகரத் தின் பொலிஸ் முதல்வர் மற்றும் உயர் பதவிகளிலுள்ள வியட் நாமியர்களுடன் டென்னிஸ் விளை யாடுவார். தன்னுடைய வியட்நா மிய சினேகிதியை ஒழித்துக்கட்ட விரும்புவதாக ஒருநாள் தற்செய லாக கூற நேர்ந்தது. அடுத்தநாள் அவள் சிறையில் அடைக்கப்பட் டாள்.

அதன் பின்பு ஆர்ப்பாட்டங்கள் தொடங்கின. சைக்கோனில் ஆர்ப் பாட்டம் செய்துகொண்டிருந்த வேளையில், வியட்நாமிய குடியர சின் இராணுவம் (ARVN) முழுப்ப லத்துடன் வெளிப்பட்டது. எல்லா இடங்களிலும் முட்கம்பிகளும், டாங்கிகளும் காணப்பட்டன.

சைக்கோனிலுள்ள மாளிகை ஒன்றில் வசித்துக்கொண்டிருந்த ஒரு முழு அமெரிக்கக் குடும் பத்தை, இளம் பராயப்பெண் மூலம, எங்களில் இரண்டு அல்லது மூன்று பேர் சந்தித்தோம் - தந்தையார் சைக்கோன் பல்கலைக்கழகத் தில் ஆலோசகராவார்.

அவர்களுக்கு வீடு நிறைந்த வேலையாட்கள் இருந்தனர். போரின் மத்தியில் பெரும் ஆடம் பர வாழ்வை நடத்திக் கொண் டிருப்வர்களில் இரு கூறான வர்களை மீண்டும் சந்தித்தோம். ஆர்ப்பாட்டக் காலத்தில் நாங்கள் இந்தக் குடும்பத்தை சந்திக்கச் சென்றோம். அங்கு அவர்கள் வசித்த கட்டத்தைச் சுற்றி முட் கம்பி அடித்து சோதனைச் சாவடி கள் இருந்தன. அது முற்றுமுழு தாக முட்கம்பியாலும் வியட்நாம் குடியரசு இராணுவத்தாலும் வளைக் கப்பட்டிருந்தது. நான் அந்த முட்கம்பி வேலிவரை சென்று அங்கு நின்ற காவலாளியிடம் இந்த வீட்டில் வசிப்பவர்களை சந்திக்க விரும்புகிறோம் என் றேன். அவன் தன்னுடைய ரைபிளை வலிந்து இழுத்து எனது நெஞ்சுக்கு நேராக நீட்டினான். நான் இந்த ஆளின் உயிரை எடுக்கப் போகின்றேன். அதிர்ஷ்ட வசமாக அந்தப் பிரிவின் அதி காரி ஓடிவந்தார். அந்தப் பயல் ஒரு அமெரிக்கனை சுடப் போவ தாக அவர் தீய கனாக் கண்டி ருக்க வேண்டும். அவரெல்லா வற்றையும் சாந்தமாக்கி எங்க ளைச் செல்ல விட்டார்.

நன்று. இது தொடர்ந்து நிகழ்ந்

**தமிழில்**
**சிவசம்பு**

தது. சைகோனில் அமெரிக்க அதிகாரிகளின் முகத்துக்கு நேராக தன்னுடைய அரசாங்கம் அமெரிக் கரை விருமபவில்லை என்றும் - ஆனால் எங்களுடைய பணத்தை விரும்புவதாகவும் சீமாட்டி நூ (Mme Nhu) கூறுவதாக, அதிகாரி களிடமிருந்து கதைகளைக் கேட் போம். கம்யூனிஸ்டுகள் எனக் கூச்சலிடுவதன் மூலம் கென்னடி யின் அரசாங்கத்தை தங்களு டைய பொக்கற்றில் வைத்திருப்ப தாக நன்றாக அறிந்து, கர்வம் மிக்கவர்களாக விளங்கினர்.

எங்களை விரும்புவதாக அவர் கள் எங்களுக்குச் சொல்லவேண் டியதில்லை. அங்குள்ள அமெரிக் கர்களுக்கு அலட்சியத்தைக் காட்டுவதை விட அவர்கள் வேறு எதையும் செய்யவில்லை. 1963 இல் அவர்கள் மோசடியான தேர் தல் ஒன்றை ஒழுங்கு செய்தனர். அதில் சபை உறுப்பினராவதற்கு தனித்தனி வேட்பாளர்கள் போட்டி யிட்டனர். சீமாட்டி நூவும் ஒரு வேட்பாளர் ஆவார். எதிர்ப்பே யில்லை. ஜனாதிபதி டீம்மீன் முழுக் குடும்பமுமே தங்களை உறுப்பினர்களாகப் போட்டனர்.

இது போன்ற அனுபவங்க ளின் மூலம் எங்களில் பலர் ஏதோ ஒன்று உண்மையாகவே தவறானதென உணரத் தொடங் கினர். நாங்கள் அங்கிருப்பதன் நோக்கம் இந்தப் பொலிஸ் அர சுக்கு பாதுகாப்பளிப்பதே. தாங் கள் பெரும் படையை கொண்டு வருவதற்கு வசதியாக, ஏதோ ஒன்று நிகழ வேண்டும் என அமெரிக்கர்கள் காத்திருக்கின் றனர். 'பாட்டானில் (Battaan) சிக்கியிருந்த படையினருக்கு பிலிப்பைன்ஸில் இது தான் சம் பவித்தது.' நாங்கள் தூண்டில் முள்ளில் இரையாகவே அங் கிருந்தோம். பத்து அல்லது பன் னிரண்டாயிரம் பேராகிய நாங்கள் தோற்கடிக்கப்பட்டோமேயானால், அது இன்னும் பெரிய போருக்கு ஒரு நொண்டிச் சாட்டாகும்.

வியட்நாமிலுள்ள அமெரிக் கன் படையணி முழுவதும், சிறு அளவில் பரப்பப்பட்டிருந்தது. அனேகமாக ஒரு இடத்தில் ஐந் நூறு பேருக்கு மேல் இருக்க மாட்டாது. ரான் சொன் பகுதியில் தான் அதி உயர் செறிவான படை இருந்தது. வியட்நாமியக் குடியரசின் இராணுவமே எங்க ளுக்கெதிராகத் திரும்பலாம் என் பது வெளிப்படையாகிக் கொண் டிருந்தது. 1963 கோடை காலத் தில் இது ஒரு உண்மையான கவலையாக இருந்தது. சதிப் புரட்சி ஒன்று நிகழப் போகிறது என்ற கலந்துரையாடலில் இருந்து இது உண்மையாகவே வெளிப் படையாகிக் கொண்டிருந்தது. நான பல முறை சைக்கோனுக்குச் சென்ற வேளைகளில், வியட்நா மிய அதிகாரிகள் வருகின்ற மது பானச் சாலைகளில் நடைபெறு கின்ற இரகசிய உரையாடலில் இருந்து இதைநான் கேள்விப் பட்டதை நினைவுகூர முடிகின் றது.

1963 ஒக்டோபர் நடுப்பகுதி யில் நான் வியட்நாமை விட்டு வெளியேறினேன். இரண்டு கிழ மைகளின் பின் சதிப்புரட்சி இடம் பெற்றது. சதிப்புரட்சி இடம்பெறு வதற்கு முந்திய இரவு, பெட்டி களை அடுக்கி, நாட்டை விட்டு புறப்படுவதற்கு ஆயத்தமாகவும், தங்களுடைய உபகரணங்களை வெடிக்க வைக்க ஆயத்தமாகும் படியும் அவர்களுக்குக் கூறப்பட் டதாக, அங்கிருக்கும் மக்களில் ஒருவர் கூறினார். அந்த நிலை யில் வியட்நாமை விட்டு முற்றாக வெளியேறுவதுதான் மாற்று வழி களில் ஒன்றாக இருந்தது. மேற்கு முனையிலுள்ள (west point) ஆயத் தப் பாடசாலைகள் செல்வதற்கா கவே வியட்நாமிலிருந்து நான் திரும்பி வந்தேன். நவம்பரில் நான் அப்பாடசாலையில் இருந் தேன். எல்லோரும் ஒரு அறையி லிருந்து ஒரு கூட்டம் நடத்திக் கொண்டிருந்தோம். ஜனாதிபதி கென்னடி சுடப்பட்டதாக ஒரு அறிக்கை வந்துள்ளது என்று அதிகாரிகளில் ஒருவர் கூறினார். எல்லோரும் அதிர்ச்சிக்குள்ளா னோம். 'இந்த மாத ஆரம்பத்தில் வியட்நாமிலுள்ள ஜனாதிபதி சுடப பட்டார். இப்பொழுது நான் இங்கு திரும்பி வந்துவிட்டேன். எங்களு டைய ஜனாதிபதி சுடப்பட்டார்.' என்பதே எனது உணர்வாக இருந் தது. நான் எதை விட்டேனோ அது என்னைத் தொடர்ந்து பின்னால் வருகின்றது. வியட் நாமில் நடப்பதுபோன்ற எதையும் வொஷிங்டன் பகுதியிலுள்ள ஒருவருமே பெரும்பாலும் அறிய வில்லை. அங்கு சென்ற எங்க ளில் பலர், எங்களுடைய வலது புஜங்களில் இராணுவப் பட்டி களை அணிந்திருக்கின்றோம். அது நாங்கள் போரில் ஈடுபட் டுள்ளதைக் குறித்துக் காட்டு கின்றது. 'என்ன போரில் நீங்கள் ஈடுபட்டிருந்தீர்கள் மகனே?' அது எங்கே நடக்கிறது? அங்கு சண் டையிடும் மக்களை நாம் வைத் திருக்கிறோமா? என்று கேணல் கள் என்னை நிறுத்திக் கூறுவார் கள்.

அவ்வளவு மட்டுமே அமெரிக் காவில் வியட்நாமைப்பற்றித் தெரிந்திருந்தது. ✻



## குளத்துப்புழை ஆறு

குளத்துப்புழை ஆறு
இந்நேரத்தில்
இவ்வரிகளை எழுதும்
இந்நேரத்தில் கூட
ஓடிக் கொண்டிருக்கும்.
தோணிகள் ஓட்டமுடியாத
குளத்துப் புழையாற்றின் கரைகளில் மீன்களுக்குக்
கடலை வாங்கச் சொல்லி
கொஞ்சும் மலையாளத்தில்
நச்சரிக்கும் சிறுமியரின் வீடுகள்
எந்தச் சரிவில் இருக்கும்?
எனக்கு ஏனோ
வடபுறத்தை விடத் தென்புறமே பிடிக்கிறது.
அதனால் அவர்களின் வீடு
தென்சரிவிலேயே
உயரமான தேக்கு
மரங்களினூடே
மணிகண்டனின் ஆராதனை
மணியொலி கேட்கும் தூரத்தில்
இருக்கட்டும்.
குளத்துப் புழையாறு
நூறாயிரம்
கிருஷ்ண சுக்ல பட்சங்கள்
கடந்தும் ஓடுகிறது.
காலநினைவற்றுத்
திளையும் மீன்களோடும்
தென்சரிவுத் தேக்குமரங்களோடும்.

- வண்ணநிலவன்



# தீபாவளி சிறப்பு மலர்

## தீவினைகள் அகன்றோடும் தீப ஒளித் திருவிழா இன்று!

இவ்வருடமும் தீபாவளித் திருநாள் கேதாரகௌரி விரத முடிவன்று இடம்பெறுகின்றது.



இத்திருநாளில் இந்து சமயத்தவர்கள் அதிகாலை துயிலெழுந்து எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்தபின் புத்தாடை புனைந்து இறைவனுக்குத் தீபமேற்றி வழிபடும் திருநாளே இத்தீபாவளித் திருநாளாகும்.

தீபாவளி என்றால் தீப வரிசை எனப்பொருள்படும். இந்து சமயத்தில் விரதங்கள், திருவிழாக்கள், பண்டிகைகள் யாவும் உயர்ந்த கலாசாரப் பண்பாட்டின் வழியில் கொண்டாடப்படுகின்றன.

இதன் அடிப்படையில் தீபாவளிப் பண்டிகை பற்றி பல கதைகள் நம் மத்தியில் பேசப்படுகின்றன.

கபில முனிவரின் சாபத்தினால் சாம்பராகிய தனது பரம்பரையினர் நல்ல நிலையில் இருப்பதற்காகவும், பாதாளலோகம், பூலோகம் செழிப்புறக் கருதி பகீரதன் கடும் தவத்தை மேற்கொண்டான். இதனால் தேவலோகத்தில் இருந்து பூவுலகிற்கு திரும்பிய ஆகாயகங்கை, பரமசிவனின் திருமுடியில் தரித்து, தன் வேகம் தணிந்து ஒரு பிரம்ம முகூர்த்த வேளையில், பூவுலகத்தில் பாய்ந்த தினம் தீபாவளி நாள் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்.

இந்த தீபாவளித் திருநாளில் தேவர்களுக்கும், மன்னர்களுக்கும், மனிதர்களுக்கும் அல்லல் கொடுத்து வந்த ஜோதிபுரத்தை ஆண்டு வந்த நரகாசுரனை, கிருஷ்ணர் சத்தியபாமா மூலம் வதம் செய்தார். அவன் சிறைவைத்திருந்த ராஜ கன்னிகைகளையும் விடுவித்தார். அன்று தொடக்கம் இந்த தினத்தை நரகாசூரனின் வேண்டுகோளின்படி கிருஷ்ணபிரான் வரமளித்ததாகக் கூறப்படுகிறது. இத்திருநாளே தீபாவளித் திருநாள் என்றும் சொல்லப்படுகிறது.

அழிவுத் தொழில் மேற்கொண்ட காளிதேவியின் உக்கிரத்தை சங்கரர் தணித்த தினம் இத்தீபாவளித் தினம் என்றும் வரலாற்றுக் கதையுண்டு. இந்தியாவில் வங்காள மக்கள் காளிதேவிக்கு பூசை செய்து இத்திருநாளைக் கொண்டாடுகிறார்கள்.



தீப நாளாகிய தீபாவளி ஆறு ஒளிப்பிழம்புகளிலிருந்து உதித்த ஆறுமுகனாகிய முருகனை வழிபடும் நாளாகவும் கொண்டாடப்படுகிறது.

பொதுவாக மக்கள் மத்தியில் சூழவுள்ள கொடூரங்கள் மறைந்து, நாட்டிலும், வீட்டிலும் ஒளிபெற வேண்டும் என்பதே இத்தீபாவளித் திருநாளின் முக்கிய குறிக்கோளாக இருக்கின்றது.

**- மணிசேகரம்.**

## பொய்மையை எதிர்த்து உண்மை வெல்லும்! இருளினை எதிர்த்து ஒளி வெல்லும்!!

### வத்திக்கானிலிருந்து இந்துச் சகோதரருக்கு தீபாவளி தினச் செய்தி!

கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப் பீடமான ரோமாபுரி வத்திக்கான் நகரில் இருந்து இந்து மக்களின் வருடாந்த பெருவிழாவான தீபாவளி தினத்தையொட்டி ஆசிச் செய்தி வெளியிடப்பட்டு வருவதை நாம் அறிவோம். இது உறவினை இன்னமும் வளர்க்கவும் ஆழப்படுத்தவும் உதவும் என்பதில் ஐயமில்லை. 'கிறிஸ்தவர்களும் இந்துக்களும் மனித உயிரின் மேன்மையைப் பேண அர்ப்பணிக்கப்பட்டவர்கள்' என்ற தலைப்பில் 2002 ஆம் ஆண்டுக்கான தீபாவளி தின செய்தி ஒன்று வத்திக்கான் நகரில் இருந்து வெளியிடப்பட்டுள்ளது.

மதங்களுக்கிடையிலான உரையாடலுக்கான திருத்தந்தையின்



பேரவையின் தலைவர் கருதினால் பிரான்சிஸ் அரின்ஸ், வத்திக்கான் நகரில் இருந்து உலகெங்கும் வாழும் இந்து மத சகோதரர்களை, என் அன்புக்குரிய இந்து நண்பர்களே! என, விளித்து இச்செய்தியினை ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி வெளியிட்டுள்ளார்.

இன்று தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது. பல்வேறுபட்ட புதிய யுக்திகள் இத்தொழில்நுட்பத்தின் வழியாக கண்டுபிடிக்கப்படவும் கையாளப்படவும் தொடங்கியுள்ளன. இத்தொழில்நுட்பம் மனித வாழ்வை முன்னேற்றப் பாதையில் இட்டு சென்றாலும், அங்கும் சில ஆபத்துக்கள் உண்டு என்பது தெளிவாக இச்செய்தியில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. மனித உயிர் பாதுகாக்கப்படவும் நீண்ட காலம் உயிர் வாழத்தக்கதாக செய்யப்படவும் கூடிய விதமாக தொழில்நுட்பம் வளர்ந்துள்ளதை சுட்டிக்காட்டுகின்ற வேளையில், மனித உயிரின் மாண்பையும் மனித உயிரின் பெறுமானத்தையும் இத் தொழிநுட்பத்தின் வளர்ச்சியில் நாம் இழந்து போகக்கூடிய ஒரு நிலை உண்டு. இதனை நாம் கவனமாக அணுகி கத்தோலிக்கர், இந்துக்கள் என்ற நிலையினைக் கடந்து மனித உயிரின் மாண்பையும், மதிப்பையும் பெறுமானத்தையும் விழுமியங்களையும் பாதுகாக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்செய்தியின் சாராம்சத்தை நோக்குவோம்.

தீபாவளியானது ஒளியின் விழாவாகும். நவம்பர் மாதம் 4ஆம் திகதி இந்து மத சகோதரர்கர் இவ்விழாவினைக் கொண்டாடுகிறார்கள். இவ்விழாவானது பொய்மையை எதிர்த்து உண்மை வெல்லும் என்பதையும் இருளினை எதிர்த்து ஒளி வெல்லும் என்பதையும் ஒரு புதிய ஆண்டின் ஆரம்பத்தையும் குறித்து நிற்கிறது.

மீண்டும் ஒரு தடவை சிறிய தீபங்களை ஏற்றியும் நிற லாம்புகளை உங்கள் வீடுகளில் தொங்கவிட்டும் இறைவேண்டுதல் ஒப்புக்கொடுத்தும், உங்கள் நண்பர்களையும் அயலவர்களையும் சந்தித்தும், உங்கள் குடும்பத்தவரோடு தீபாவளி கொண்டுவரும் மகிழ்வினைக் கொண்டாடும் நேரம் வந்துவிட்டது. எல்லா இந்து மதத்தவர்களுக்கும் எனது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களை இம் மகிழ்வின் வேளையில் தெரிவிக்க விரும்புகிறேன்.

பல சமய பாரம்பரியங்களைக் கொண்ட நண்பர்களை, அவர்களது குறிப்பிட்ட திருவிழாக்களில் எமது வாழ்வு, எமது சமூகம், எமது உலகம் என்ற கருப்பொருட்களில் நான் சிந்திக்க அழைப்பது வழக்கமாக இருக்கிறது. இவ்வருடம் தீபாவளி தினத்தன்று சமய திருவிழாக்களும் இருளில் இருந்து ஒளியையும், தீமையில் இருந்து நன்மையையும், பொய்மையில் இருந்து உண்மையையும், சாவில் இருந்து வாழ்வையும் வெற்றிகொள்ள விரும்புகின்ற மனித மனங்களின் வெளிப்பாடுகளாக இல்லையா?

என்று கேள்வி எழுப்பி தம் செய்தியை ஆரம்பித்துள்ளார் கருதினால் பிரான்சிஸ் அரின்ஸ்.

மனித உயிரின் இரகசியமானது கருவில் ஆரம்பமான கணப்பொழுது முதல் பிறப்பு வரை எல்லாப் படிமுறைகள் ஊடாகவும் செபத்தினாலும், சடங்கு செயல் முறைகளாலும் இந்து மதப் பாரம்பரியத்தில் கவனிக்கப்பட்டு வருகிறது. நாம் கிறிஸ்தவர்கள் கூட மனித உயிரிற்கு சிறப்பான மதிப்பளித்து வருகிறோம். விவிலிய நூலானது 'மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம்' என இறைவன் மனிதனை தனது சாயலாகவும் பாவனையாகவும் படைத்தார் எனப் போதிக்கிறது.

திருத்தந்தை 2 ஆம் ஆருளப்பர் சின்னப்பரால் அழைக்கப்பட்ட சர்வதேச மதத் தலைவர்களின் சமாதானத்திற்கான தினம் ஜனவரி மாதம் 2002ஆம் ஆண்டு அசிசி நகரில் கொண்டாடப்பட்டபோது அங்கு கூடியிருந்த இந்து மதப் பிரதிநிதிகள் அவ் ஒன்றுகூடலை - இறைவனை தந்தையாகக் கொண்டு கூடியுள்ள மனித குடும்பத்தின் ஒற்றுமையின் சின்னம் - என குறிப்பிட்டதை நினைவுகூர்ந்தார். இவ் ஒன்றுகூடலின் இறுதியில் எல்லா மதத் தலைவர்களும் தம் கரத்தில் இருந்த எரிகின்ற தீபங்களை ஒரு பொது மேடையில் வைத்து மனித உயிரின் மதிப்பையும் சமாதான முயற்சிகளையும் முன்னெடுப்போம் என உறுதி எடுத்தனர். திருத்தந்தை - செல்லுங்கள், சமாதானத்தின் தீபத்தை தாங்கிக் கொண்டு உலகிற்குள் செல்லுங்கள், உலகிற்கு ஒளி தேவை என்று அனுப்பி வைத்தார். எனத் தெரிவித்து கருதினால் பிரான்சிஸ் அரின்ஸின் தீபாவளித் தினச் செய்தி முடிவடைகிறது.

**அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.**

தயா அச்சகம்
Daya Computer offset Printers
138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(நாவலர் பாடசாலை முன்பாக)
ஓவ்(f)செற் பிறிண்ட் றோனியோ
சகலவிதமான அச்சுவேலைகளும் வேண்டிய வர்ணத்தில், சிறந்த முறையில் குறித்த தவணையில், குறைந்த செலவில், உங்கள் விருப்பத்திற்கேற்ப செய்திடச் செல்லுங்கள் தயாவிடம். (சி-110)

ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமிகள் அனைவருக்கும் ஏற்ற ஏற்றம்மிக்க அனைத்துத் துணிமணிகளையும், உங்கள் எண்ணம் போல் வண்ணம் வண்ணமாக, எண்ணற்ற ரகங்களை, மலிவான விலையில் தெரிவுசெய்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்
சீமாட்டி புடவைக்கடல்
சுபமுகூர்த்தப் பட்டுப் புடவைகள், கூறைச்சேலைகள் பட்டுவேட்டிகளுக்கு கைராசியான ஒரே நிறுவனம். (சி-117)
சீமாட்டி புடவைக்கடல் 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: மங்கை சில்க் 15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

காரை துரித காகிதாதிகள் சேவைகள்
KARAI QUICK DOCUMENT SERVICES
உங்கள் எதிர்காலம் எம் கணினியில்
KQDS
அன்பர்கள் அனைவருக்கும் எமது இனிய தீபாவளி வாழ்த்துக்கள்.
உங்கள் பிறந்த திகதியை மட்டும் கொண்டு பிறப்பெண், கூட்டெண் ஆகியவற்றுக்கானதும், 2003 ஆம் ஆண்டிற்கான பொதுப் பலன்களையும் கொம்பியூட்டர் மூலம் அறிந்துகொள்ளுங்கள். பிறந்த பிள்ளைகளுக்கு பிறப்பு எண்ணிற்கு ஏற்ப அதிரஷ்ட பெயர்களும், மாணவர்கள், வியாபாரிகள், உத்தியோகத்தர்கள், திருமணமாகாதவர்கள், எதிர்காலம் சிறப்படைய விரும்புபவர்கள் ஆகியோருக்கு எண் சோதிட முறையில் ஆலோசனைகள் நேரடியாகவும், தபால் மூலமும் வழங்கப்படும்.
தொடர்பு: எஸ்.சிவசங்கர் (KQDS)
ஆஸ்பத்திரி வீதி, காரைநகர். (சி-133)

நமது ஈழநாடே வாழ்க! வளர்க!!.
தீபாவளி வாழ்த்துக்கள்
சங்கு சக்கரம் இரும்பகம்
113, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
எம்மிடம் தரமான பெயின்ட் வகைகளான
☞ டியூலக்ஸ்
☞ றொபிலக்
☞ பெமோகுளோஸ்
ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (சி-123)

மாணவர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்.
புதிய வகுப்புகள்
Diploma in MS Office
Diploma in Video Mixing
Diploma in Desktop Publishing
Internet & E-mail
ஆரம்பம் 09-11-2002
STP Computer World (Pvt.) Limited.
54A, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P: 2222674

தீபாவளித் திருநாளில்
பேதங்கள், பகுப்புகள் யாதுமின்றி வாழ வாடிக்கையாளர், அன்பர்களை மனமார வாழ்த்துகின்றோம்.
ஜம்போ ஹாட்வெயர்
தளராத உறுதியுடன் இரும்பின் சுரங்கமாக ஸ்ரான்லி வீதியினை விடிய வைக்கும் விளக்கு.
இல. 129, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 0777-733681 (சி-131)

PBB

# PALM BEACH RESTAURANT

யாழ்.மண்ணில்...... Multi Cushion (Veg & Non Veg) Restaurant

## சகலவிதமான சைவ - அசைவ உணவகம்
(பார்சல்களும் பெற்றுக்கொள்ளலாம்)

- முற்றிலும் குளிரூட்டப்பட்ட, தனி இடத்தில் குடும்பத்தினருடன் உணவருந்தி மகிழ்ந்திட...
- தலைசிறந்த இந்திய உணவுத் தயாரிப்பாளர்களி னால் தயாரிக்கப்பட்ட உணவுகளை ருசித்திட......
- ஒருதடவை சுவைத்துப்பாருங்கள் - பின் தினமும் சுவைக்கத் தோன்றும் உங்களுக்கு...
- உல்லாசப் பயணிகள் தங்குவதற்கு குளிரூட்டப் பட்ட, குளிரூட்டப்படாத அறைகள் வாடகைக்கும்...



திருமண வைபவங்களா....?

பிறந்தநாள் கொண்டாட்டங்களா....?

பிரியாவிடை வைபவங்களா....?

விருந்துபசாரங்களா....?

★ புரியாணி வகைகள்
★ ஃவ்றைட் றைஸ்
★ நூடில்ஸ் வகைகள்
★ பீஸா (Pizza) உணவுகள்
★ பிரெஞ்ச் பழச்சாறு வகைகள்
★ றோல்ஸ் வகைகள்
★ சப்பாத்தி, பூரி மற்றும் இந்திய உணவுகள்
★ சைவ, அசைவ கறி வகைகள்
★ ஐஸ்கிறீம் வகைகள்
★ சூப் வகைகள்



இவற்றோடு இன்னும் பல சுவையான உணவுகளுக்கு நாடுங்கள்

எதுவானாலும் இனிய சுவையுடைய உணவுகளுடன் நிறைவேற்றிட.......

# பாம் பீச் றெஸ்ரோறன்ற்

இல. 10/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

077-733316
077-153889



அனைவருக்கும்
எமது மனம் நிறைந்த
தீபாவளி வாழ்த்துக்கள்



உங்களின் தேவையே - எங்களின் சேவை



# தீபாவளி சிறப்பு மலர்



**கஜமுகன் ஹாட்வெயர்ஸ்** எங்கள் மனமுவந்த தீபாவளி வாழ்த்துக்கள்

அழகிய நிறங்களில் பல வகைப் பட்ட பெயின்ற் வகைகள், கட்டடப் பொருட்கள், ஏனைய உபகரண வகைகள், எதுவானாலும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள

## கஜமுகன் ஹாட்வெயர்ஸ்

147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. - 2222833 Fax - 2222368

(சி-101)

---

அனைவருக்கும் எமது உளம் நிறைந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

யாழ்.நகரில் தரமான சைவ உணவு வகைகளுக்கு...

ஸ்ரீ நிகேதபவன்
(விஷ்ணு விஹார்)

சுவையோ சுவை
வாருங்கள் வந்து
சுவைத்து மகிழுங்கள்

## ஸ்ரீ நிகேதபவன்

163, மின்சார நிலைய வீதி,
(பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

(சி-102)

---



## கலாஸ் கிறீம் ஹவுஸ்



கோடையில் தாகத்தைப் போக்கிடும் தரமான குளிர்பான வகைகளுக்கும்
தரமான சுவை மிகுந்த ஐஸ்பழம், ஐஸ் சொக், ஐஸ்கிறீம் வகைகளுக்கும் இன்றே நாடுங்கள்

**கலாஸ் கிறீம் ஹவுஸ்** 166/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

---

வாடிக்கையாளர்கள் நண்பர்களுக்கு எமது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

## ரவி அன் ராஜ் சில்க்ஸ்

நவநாகரிக வடிவங்களில மங்கள வைபவங்களுக்கு வேண்டிய அனைத்துப் புடவைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

**Ravi & Raj Silks**

77, Grand Bazaar, Jaffna.
T.P. - 2222469

(சி-067)

---

தீபாவளி நல் வாழ்த்துக்கள்

யாழ்.நகரில் புதியதோர் உதயம்



## நியூ நவீனா நகையகம்

☆ நவீன டிசைனுடைய 22 கரட் தங்க நகைகளின் சங்கமம் ☆ உண்மை அறிய எங்களிடம் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.
☆ நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்திற்கு நாடுங்கள்

குறிப்பு:- முன்பு **நியூ ஆனந்தா ஜுவலர்ஸ்** நிர்வகித்தவரின் மற்றும் ஓர் நிறுவனம்

**நியூ நவீனா நகையகம்** இல.189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-085)

---

OFFICE EQUIPMENT SERVICES

## OES



High Quality OES Steel Products
- OES Steel Cupboards
- OES Steel Wardrobe
- OES Steel Filling Cabinets
- OES Steel Tables
- OES Steel Cash Boxes

Repairing Servicing
Maintenance of Office Appliances
- ★ Computers
- ★ Roneo Machines
- ★ Type Writers

*Office* - No34, Sir Pon.Ramanathan Road
Thirunelvely
Jaffna

(சி-090)

---

யாழ்.குடாநாட்டிற்குள் எங்குமே பார்த்திராத
இயற்கை எழில் நிறைந்த பசுமையான காட்சியுடையதும்,
புலம்பெயர் தமிழரால் போற்றப்படுகின்றதும்,
கட்டடப் பொருள் விற்பனையும் ஒப்பந்தகாரருமான

## பூங்கனிச் சோலையின்

இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| ❖ பூச்சாடிகள் | ✣ මල් පෝච්චි | ✣ Flower Pots |
| ❖ பூங்கன்றுகள் | ✣ මල් පැල | ✣ Flower Plants |
| ❖ கனிமரக்கன்றுகள் | ✣ පලතුරු පැල | ✣ Fruit Plants |
| ❖ வீடியோ | ✣ පටිගත කිරීම | ✣ Video |
| ❖ புகைப்படம் | ✣ ඡායාරූප ගැනීම | ✣ Photograph |
| ❖ புகைப்படக் கலையகம் | | ✣ Mixing Studio |

இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி.

(சி-062)

---

நவீன பாணியில் அமைந்த விதம் விதமான தங்க நகைகளுக்கு விரையுங்கள்

## வீ.எம்.கே.ஜுவலர்ஸ்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
இதயங் கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்

**V.M.K. Jewellers**

305, Kasthuriar Rd, Jaffna.

(சி-91)

---

## தீபாவளி வாழ்த்துக்கள்!

மின்சார உபகரணங்கள் மற்றும்
மின்சார வீட்டுப் பாவனைப் பொருட்கள் ஆகியவற்றுக்கு
நீங்கள் நாடவேண்டிய இடம்

## தர்சினி எலெக்ரிக்கல்ஸ்

அச்சுவேலி.

(சி-66)



# தீபாவளி சிறப்பு மலர்




தீபாவளி வாழ்த்துக்கள்

அழகற்ற பற்களா?
மிதப்புப் பற்களா?
பார்வைக் குறைபாடா?
கவலையை விடுங்கள்! நாடுங்கள்!!

## எரிக் கணேஸ்

- மின்னிடும் மகத்தான சங்குப் பற்களை கட்டிடவும்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடவும்
- கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெறவும்
- கட்டுப் பற்களை சுத்தம் செய்வதற்கான மாத்திரை பெறவும்

நாடவேண்டிய ஒரே நிறுவனம்

## எரிக் கணேஸ்

564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2486

கிளை:
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
இல. 80, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

கிளை:
இல. 91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

(சி-105)

## ஆசீர் வாணிப நிலையம்

202 A, K.K.S. வீதி,
Jaffna.

தீபாவளி வாழ்த்துக்கள்

பாடசாலை உபகரணங்கள் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (சி-127)

யாழ். நகரில் 07.11.2002 இல்
மங்களகரமான திறப்பு விழா
இதோ!

## ஏசியன் எலக்ரோனிக் சென்ரர்

அன்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்!
மின்சார, இலத்திரனியல் பொருட்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஒரேஇடம்.

## AASIAN ELECTRONICS CENTRE

No. 11/4, Stanly Rd, Jaffna.
T.P. :- 0777-785549.
(சி-136)

## கிளின்ரன்

அந்திய கால சேவை

Clinton Funeral Service

548, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021-3518
(சி-109)

விவசாயிகளே!

உங்களுக்குத் தேவையான பங்கசு
நாசினிகளான
வண்டசோப், பொலிராம், பெலிமட்
கிருமிநாசினிகளான
பைறினெக்ஸ், பீ.பி.எம்.சி, கேமிடோஸ்
இத்துடன் புதிய மாசஸ்
மற்றும் M.CPA 60% 3.4 DPA
என்பன பெற்றுக்கொள்ளலாம்.

உழவர் களஞ்சியம்
பலாலி வீதி,
திருநெல்வேலி.

கமக்காரர் மாளிகை
K.K.S. வீதி,
சுன்னாகம்.

T.P.:- 021-222 3785
(சி-142)

## சிறிகாந்தா சேவிஸ் சென்ரர்

சகல வாகனங்களுக்கும் தரமான முறையில் சேவிஸ் செய்துகொள்ள நாட வேண்டிய இடம்.

## சிறிகாந்தா சேவிஸ் சென்ரர்

பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி,
கோண்டாவில்.
(சி-144)

## அல்பா மிக்சர்

மற்றும் குளிர்பான வகைகள்,
பிஸ்கட் வகைகள், கண்டோஸ்
வகைகள் என்பவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றிடலாம்.

☆ யாழ். சுகாதாரப் பகுதியினரின் அங்கீகாரம் பெற்றது.

## அல்பா மிக்சர்

144, பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-122)

உள்நாட்டு, வெளிநாட்டுத்
தொலைத்தொடர்புகள்!
தரமான போட்டோப் பிரதிகள்!
கம்பியூட்டர் ரைப் செற்றிங்!
(லேசர் பிரின்டர் வசதியுடன்)
மாணவர்களுக்குத் தேவையான
பாடசாலை உபகரணங்கள்!
வான், கார், ஆட்டோ
போன்றவற்றை வாடகைக்கு
அமர்த்திக் கொள்ளவும்!

## RAINBOW LINKS

214, முதலாம்
குறுக்குத் தெரு,
ஆஸ்பத்திரி வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-135)

வியாபாரம் பெருக!
நமது ஈழநாட்டில்
விளம்பரம்
செய்க!!

## ஐங்கரன் வீடியோ விஷன்

☆ பழைய, புதிய பாடல்களை CD யிலிருந்து நேரடியாக ஒலிப்பதிவு செய்திடவும்
☆ பழைய, புதிய தமிழ்-ஆங்கில VCD, CD பிரதிகளை வாடகைக்குப் பெற்றிடவும் நாடவேண்டிய இடம்.

39, M.P.C.S. Lane, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.
(சி-141)

தாசன் ஸ்ருடியோ ஸ்தாபனத்தாரின் தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!
உட்புற வெளிப்புறப் படப்பிடிப்பாளர்கள்
கலர், கறுப்பு-வெள்ளைப் படங்களை சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ள

## தாசன் ஸ்ரூடியோ

K.K.S. றோட், இணுவில்.

☆வன்னி மாவட்ட ஜெகா போட்டோ வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி. ஜெகா போட்டோவை வெகு விரைவில் மானிப்பாய் - யாழ்.வீதி பூங்காவுக்கு அருகில் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (சி-150)

## SELVA ELECTRICALS

☆ தரமான மின்சார உபகரணங்கள், P.V.C. குழாய்கள், இணைப்புகள் என்பவற்றை நியாய விலை, உத்தரவாதம் என்பவற்றுடன் பெற்றுக்கொள்ளவும்
☆ கட்டடங்களுக்கான மின் இணைப்புகள் (வயறிங்) பைப் லைனிங் வேலைகளை சிறந்த முறையில் செய்து கொள்ளவும்

நாடவேண்டிய ஒரே இடம்.

## செல்வா எலெக்ரிக்கல்ஸ்

இல.68, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி.
(சி-140)



நவீன முறையில் கணினி மூலமான
பல வர்ணப் பிறின்டிங் வேலைகளுக்கும் யாழ்.நகரில்
பிரசித்திபெற்ற ஒரே நிறுவனம்

## கங்கை ஓ(F)வ்செற் பிறின்டேஸ்

184, A, நாவலர் றோட்,
பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம்.



திருமண, பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ், மாதாந்த சஞ்சிகை, பாடசாலை புத்தகம், பரீட்சை வினாத்தாள், நினைவு மலர், லேபில் வகை, லெட்டர் பாட், பில் புத்தகம் போன்ற அனைத்து அச்சு வேலைகளையும் திறம்பட வடிவமைத்துப் பெற்றிடலாம்.
(சி-106)

## தினமும் விமான சேவைகள்

விமானப் பயணிகள் நன்மை கருதி வாரத்தில் 7 நாட்களும் காலை, மாலை விமான சேவைகளான

எக்ஸ்போ



லயன் ஏயார்



செரண்டிப்



ஆகிய மூன்று விமான சேவைகளின் பயணச்சீட்டுக்களையும் 30.10.2002 தொடக்கம்

**ஸ்ரான்லி வீதி, இல.212, மகாலட்சுமி கட்டடத்தில்**

அமைந்துள்ள தனித்தனி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

T.P. No.:- 021-222 3564, 021-222 2024, 0777-357109.
(சி-125)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## தற்காப்பில் கவனம் கொள்வோம்!

யாழ்.நகரப் பகுதிக்குள்ளேயே நேற்றுமுன்தினம் முன்னிரவு வேளையில் நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகமும் திருட்டுச் சம்பவமும் - யாழ்ப்பாணத்தில் தற்போதுள்ள பாதுகாப்பு அற்றதும் சமூகச்சீர்குலைவு இருப்பதுமான நிலையைச் சுட்டிக்காட்டுவதாகவுள்ளது.

இச்சம்பவம் கடந்த சில நாட்களாகத் தொடரும் இரவுநேர கொள்ளைச் சம்பவங்களின் தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு சந்திகளிலும் இராணுவத்தினர் காவலரண்களை அமைத்துள்ள நிலையிலும் - இத்திருட்டுச் சம்பவங்கள் துணிகரமாக நடைபெற்று வருகின்றமையானது, சமூகப்பாதுகாப்பிலுள்ள தளர்வையே காட்டுவதாக அமைகின்றது.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரும், பொலிசாரும் குவிக்கப்பட்டிருந்தாலும் - ஒரு ஒழுங்குமுறையான சிவில் பாதுகாப்பு நடவடிக்கைகளிலுள்ள வெற்றிடம் - இத்தகைய செயல்களுக்கு ஊக்கமூட்டுவதாகவும் உள்ளது.

படையினர் தமக்கான இராணுவ மற்றும் பாதுகாப்பு நலன்களில் அக்கறை செலுத்தும் அதே வேளை - யாழ்.சமூகத்திற்கான பாதுகாப்பு என்பது, கவனத்திற் கொள்ளப்படாத விடயமாகவே கையாளப்பட்டு வருகின்றமையின் வெளிப்பாடாகவும் இத்திருட்டுச் சம்பவங்கள் அமைகின்றன.

அதேவேளை - இவ்வாறு சட்டவிரோதச் செயல்களில் இறங்குவோர் ஆயுதங்களைப் பயன்படுத்துவது பற்றி ஆராய்வதும் முக்கியமானதாகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தமும், போர் ஓய்வும் நடைமுறைக்கு வந்த பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினரைத் தவிர - ஏனைய எவரும் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது என்ற சூழ்நிலையில்- துப்பாக்கியைப் பயன்படுத்திக் கொள்ளையடிப்பவர்கள் யார் என்ற பெரும் வினாவும் எழுகின்றது?

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் - படையினரல்லாதவர்களிடம் இருந்தான ஆயுதக்களைவு நடைபெற்றுவிட்டதாகக் கூறப்படுமிடத்து, இத்தகைய சம்பவங்களில் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் எங்கிருந்து வந்தன? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழு கின்றது.

இவ்வாறு ஆயுதங்கள் - சட்டவிரோத நபர்களிடம் புழங்குவது, இன்று நடைபெறும் திருட்டு, கொள்ளைச் சம்பவங்களிலிருந்து - நாளை இன்னும் பாரிய சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் பயன்படலாம் என்ற அபாயமும் இருப்பதையும் மறுக்கவியலாது.

எனவே - இத்தகைய சம்பவங்களின் சூத்திரதாரிகள் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு, மக்கள் மத்தியிலான சமூகப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியது உடனடியான பணியாகின்றது.

ஏற்கனவே, இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெற்று வந்தபோதும் - அவற்றுக்குத் தகுந்த நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாத பட்சத்தில், தமது பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்திக்கொள்ளும் தற்காப்பு நிலைக்காவது மக்கள் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

முழுமையான சிவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படாத பட்சத்தில் - இவ்வாறான தற்காப்பு ஒழுங்கமைவுகளே, தற்காலிகமான பயனைத் தரக்கூடியதாகவும் இருக்கும்.

அண்மைக்காலமாக குடாநாட்டில் - பரவலாகச் செயற்பட்டுவரும் - கலாசாரத்தைப் பாதுகாக்கும் குழுக்களை ஒத்ததாக, தத்தமது பகுதிகளில் பாதுகாப்பையும், விழிப்புணர்வையும் கண்காணிக்கும் குழுக்களை மக்கள் தம்மிடையே அமைத்துக்கொள்ள முன்வர வேண்டும்.

ஒவ்வொரு பகுதியிலுமுள்ள குடிமக்கள் ஒன்றிணைந்து உருவாக்கும் பாதுகாப்புக் குழுக்கள், தமது தற்காப்பு ஒழுங்கமைவை - நேர்மையாகவும், சீராகவும் நடைமுறைப்படுத்தும் பட்சத்தில்-தற்காலிகமாகவேனும் இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் நடைபெறாது தடுக்கமுடியும்.

அதேவேளை - இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோரை, ஈடுபட முனைவோரைக் கண்காணித்து, அவர்களைச் சட்டரீதியாகவோ, சமூக ரீதியாகவோ கட்டுப்படுத்தும் ஆற்றலையும் இக்குழுக்கள் ஏற்படுத்திக் கொள்ள முனைய வேண்டும்.

ஓர் ஒழுங்கான சிவில் பாதுகாப்பு நடைமுறைகள் சரிவர நடைமுறையாகும் வரை - இத்தற்காப்பு வழிமுறைகளே, இவ்வாறான சட்டவிரோதச் செயல்களைத் தடுப்பதற்கு ஒரே வழியாக இருக்கும். எனவே, சிந்திப்போம்!, செயற்படுவோம்!!.

# 2003ஆம் ஆண்டுக்கான கல்வி அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் கிளிநொச்சியில்!

(திருகோணமலை)

வட-கிழக்கு மாகாணத்தில் 2003ஆம் ஆண்டுக்கான கல்வி அபிவிருத்தித் திட்டமிடல் கூட்டம் இம்முறை கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ளது. மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்.இஸ்ஸதீன் தலைமையில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாகாணக் கல்வி அமைச்சின செயலாளர் க.சண்முகலிங்கம் உட்பட, வட-கிழக்கு மாகாணத்திலுள்ள 24 வலயக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்வளவு காலமும் திருகோணமலையிலேயே நடத்தப்பட்டு வந்த இந்தக் கூட்டம் முதன்முறையாக திருகோணமலைக்கு வெளியே நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

## மாளிகாவத்தை இழப்புகளுக்கு விரைவில் நட்டஈடு வழங்கப்படும்!

(கொழும்பு)

மாளிகாவத்தைக் கலவரங்களில் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை மதிப்பீடு செய்யும் முதற்கட்ட நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இழப்பு விபரங்களைத் திரட்டி மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக மாவட்டச் செயலாளர் மூலம் இழப்பு விபரப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததும் உரிய நட்ட ஈடுகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவுப் பரிசோதகர் பயிலுநர் குழு கட்டைவேலி ப.நோ.கூ.சங்கத்துக்கு விஜயம்

வடக்குக் கிழக்கு கூட்டுறவு நிறுவனத்தில் பயிற்சி பெறும் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான பயிலுநர் குழு ஒன்று - தமது களக்கற்கைக்காக கடந்த திங்கட்கிழமை - கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

கல்லூரியின் உப அதிபர், உத்தியோகத்தர்கள் உட்பட 19 பேர் இக்குழுவில் அடங்கியிருந்தனர். இவர்கள் பல குழுக்களாகப் பிரிந்து, தமது சங்கப் பணியாளர்களுடன் களக்கற்கைக்கான கலந்துரையாடலை மேற்கொண்டனர் எனச் சங்கத்தின் பொது முகாமையாளர் செ.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

# மலேரியா நோயைக் கட்டுப்படுத்த 500 நுளம்பு வலைகள் விநியோகம்

(வலி.வடக்கு)

தெல்லிப்பழை - உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் மலேரியா நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் நுளம்பு வலைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

உலகவங்கி சுகாதார நலத் திட்டத்தின் கீழ் இதற்காக 500 நுளம்பு வலைகள் மேற்படி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை - உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் மலேரியா நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளபோதும், இந்நோய் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து இங்கு வந்து குடியேறியவர்களால் மலேரியா நோய் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக சுகாதார பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

மலேரியா நோயைக் கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே இந்த நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(105)

# நிதிப் பயன்பாடு குறித்து அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் காலை யாழ். அரசாங்க அதிபர் பணிமனையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ஆனந்தசங்கரி, விநாயகமூர்த்தி, சிவாஜிலிங்கம், ரவிராஜ், கஜேந்திரகுமார் ஆகியோரும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராஜநாயகம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், யாழ். மாவட்ட உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் யாழ். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றியும் எதிர்காலத்தில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, மதனராஜா மற்றும் அமைச்சர் மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(லி)

# பேச்சுக்கள் நடைபெறும் சூழலில் வெளியாகிய நீதிமன்றத் தீர்ப்பு ஏமாற்றமளிக்கின்றது!

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆயுத மோதல்களுக்கு முடிவுகட்டி சமாதானப் பேச்சுக்கள் முன்னகர்ந்து கொண்டிருக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு 200 வருடச் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை சமாதானத்தை நேசிக்கின்ற மக்களைப் பெரிதும் ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளதாக, யாழ்.மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஆயுத மோதல்களுக்கு முடிவுகட்டி சமாதானப் பேச்சுக்கள் நல்ல சூழ்நிலையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், இலங்கை மத்திய வங்கிக் குண்டுத்தாக்குதல் தொடர்பான வழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு சிறிலங்கா மேல்நீதிமன்றத்தினால் 200 வருட சிறைத்தண்டனை வழங்கிய முறையானது தமிழ் மக்களை மாத்திரமன்றி சமாதானத்தை நேசிக்கின்ற மக்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தையும் எதிர்கால வாழ்வின் நம்பிக்கையும் தகர்த்ததாகவே கருதுகின்றோம்.

கடந்த காலங்களில் நிகழ்ந்த சில அரசியல் பிரச்சினைகளை குறுகிய வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் அணுகியதால் ஏற்பட்ட விளைவின் வக்கிரமாகவே இதை நாம் கருதுவது மட்டுமல்லாது, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினை குறித்து சிங்கள, தமிழ்ச் சமூகங்கள் மத்தியில் துளிர்விட்ட உணர்வும் உறவும் வேறுபட்ட பார்வைக்குத் தூபமிடும் செயலாக அமைவதாகவே நாம் கருதுகின்றோம்.

இந்த நீதிமன்றத் தீர்ப்பானது அரசியல் கண்ணோட்டம் புதைந்த வெளிப்பாட்டின் அடையாளமாகும்.

போரில் சிதைந்து போயிருக்கும் தமிழர் தாயகத்தின் போர் நெருக்கடிகளை முழுமையாகத் தணித்து இயல்பு நிலையைத் தோற்றுவிப்பதே ஸ்ரீலங்கா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளின் உடன்பாட்டு விதிகளினதும் நல்லெண்ண நடவடிக்கைகளினதும் குறிக்கோளாகும்.

இது இத்தீர்ப்பினால் சிதைந்து போகாது பாதுகாப்பது அரசின் தார்மீகக் கடமை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இத்தீர்ப்பினால் வேதனையும் மனக்குமுறல்களுக்கும் உள்ளாகியுள்ள மக்களின் உணர்வுகளுக்கு அரசு மதிப்பளிக்காத பட்சத்தில், நாடளாவிய மக்கள் போராட்டங்களை அரசு சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படும் என்பதை நாம் கோடிட்டுக் காட்ட விரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில் காவல்துறை அலுவலகம் திறப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் முதல்முதலாக தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறைப் பணிமனை திறந்து வைக்கப்படவுள்ளது.

சம்பூரில் காவல்துறை பணிமனை நாளை திறந்து வைக்கப்படும் எனப் புலிகளின் திருகோணமலையில் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் சுற்றாடல் அபிவிருத்தித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஒவ்வொரு வருடமும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, புதிய மாணவர்களின் பங்களிப்புடன் சுற்றாடல் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தி வருகின்றது.

2003 ஜனவரி மாதம் 1ஆம் திகதி கல்லூரியில் உள்வாங்கப்படும் புதிய மாணவர்கள்- அலங்காரமலர் வகைகள், மூலிகைக்கன்றுகள், பழவகைக்கன்றுகள், காடுவளர்ப்புக்கு உகந்த கன்றுகள், கிழங்கினால் முளைக்கும் வித்துக்கள், நீர்த்தாவரங்கள், தென்னங்கன்றுகள், கமுகு மரங்கள், பனம்விதைகள் போன்றவற்றைக் கல்லூரியில் ஒப்படைக்குமாறு யாழப்பாண கல்வியியற்கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் கேட்டுள்ளார்.

அடுத்த வருடம் புதிய கட்டட வேலை முடிவடைந்து கல்லூரி புதிய இடத்தில் இயங்கவுள்ளதால், இந்த சுற்றாடல் அபிவிருத்தி வேலைத்திட்டம் மிகவும் பயனுள்ளதாக அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சுயநலமில்லாத மனுக்குலத்தின் மேம்பாட்டுக்கு துணையும் ஊக்கமும் தருகிறது "லயன்ஸ் கழகம்"

*நல்லூர் லயன்ஸ் கழகத்தின் தலைவராகச் செயற்பட்டு வருபவர் லயன் வி.எஸ்.சொக்கலிங்கம், இலங்கை போக்குவரத்துச்சபையின் வட பிராந்தியப் பொது முகாமையாளராகப் பல வருடங்கள் பாங்குறு பணியாற்றிடத் தனக்குக் கிடைத்திட்ட அரிய வாய்ப்பு, தன் நெஞ்சில் எஞ்ஞான்றும் பசுமையாக நிலைத்திருக்கும் என்கின்றார். இவர் "யுத்த அனர்த்தத்தால் மேற்படி சேவை சீர்குலைந்திருந்த போது அதனைச் சீர்ப்படுத்த அர்ப்பணிப்பு உணர்வுடன் உழைத்தேன், அது போன்று தற்போது எனக்கு வழங்கப்பட்டுள்ள நல்லூர் லயன்ஸ் கழகத் தலைமைப் பதவி மூலமும் சகல மக்களினதும் வாழ்வு நிலையுயர உழைப்பேன்" என இவர் "நமது ஈழநாடு" இதழுக்கு அளித்த நேர்காணலின் போது உணர்வுபூர்வமாகச் சொன்னார்.*




**கேள்வி**:சர்வதேச லயன்ஸ் கழகம் என வியாபித்த தனிப் பெருமையுடன் திகழும் தங்கள் அமைப்புப் பற்றி சற்றுக் கூறுவீர்களா?

**பதில்**:இலங்கை முழுவதுமாக 306-ஏ,பி,சி என மூன்று பிரிவுகளாக இவ்வமைப்புப் பணிபுரிகின்றது. வட பகுதியில் செயற்படும் 306-பி(B) பிரிவுக்குள் மாத்திரம் 2460 உறுப்பினர்கள் உள்ளனர். 87 லயன்ஸ் கழகங்கள் இங்கு என இயங்குகின்றன. ஏ,பி,சி என்ற மூன்றிலுமாக சுமார் 6700 உறுப்பினர்கள் இருக்கின்றனர். அதே வேளை சர்வதேச லயன்ஸ் கழகங்களில் 13 இலட்சத்து 78 ஆயிரத்து 651 உறுப்பினர்களின் மொத்தத் தொகை உள்ளது. சர்வதேச ரீதியாக 44 ஆயிரத்து 675 லயன்ஸ் கழகங்கள் இயங்குகின்றன. சர்வதேச ரீதியாக 738 மாவட்டங்களில்,189 நாடுகளில் லயன்ஸ் கழகங்களின் சேவை பரந்துபட்டுள்ளது. ஐ.நா.சபையில் கூட 192 நாடுகளே உறுப்புரிமை பெற்றுள்ளன. இதிலிருந்து சர்வதேச அரங்கில் மிகப் பெரியதும், அதி மதிப்பு மிக்கதுமாக இவ்வமைப்பு துலங்குவது தெளிவாகின்றது. ஐ.நா அமைப்பிலும் (U.N.O) சமூக சேவை ஸ்தாபனமாக இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ் வாய்ப்பு ஏனைய நிறுவனங்களுக்குக் கிடைப்பது என்பது அசாதாரணமானது.

**கேள்வி**: வட மாகாணத்தில் தங்கள் கழகங்கள் பற்றி..?

பதில்: வட மாகாணத்தில் 306-பி பிரிவுக்குள் 17 கழகங்கள் இயங்குகின்றன. யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி வட்டம், கோப்பாய், கொக்குவில், இணுவில், உரும்பராய், மானிப்பாய் வட்டம், மானிப்பாய் பிரிவு, சுன்னாகம், வட்டுக்கோட்டை, வடமராட்சி, சாவகச்சேரி, மன்னார், வவுனியா, வவுனியா வட்டம் என இவை உள்ளன.

**கேள்வி**: யாழ்.குடாநாட்டில் உங்கள் பணி,திட்டங்கள் எத்தகையவை?

**பதில்**: கண்பார்வை தொடர்பான விழிப்புணர்வு, நீரிழிவுப் பரிகாரம், விபதுத் தவிர்ப்பு, வீதி ஒழுங்குகள், கல்வி அபிவிருத்தி, குழந்தையியல் கல்வி, ஊனமுற்றோர்க்கான உதவி, செவிப்புலனற்றோர் மற்றும் முதியோர் நலம், போதைவஸ்து விழிப்புணர்ச்சி, சூழல் பாதுகாப்பு, தொழில நுட்ப அபிவிருத்தி இவ்வாறு இன்னோரன்ன வகைகளில் எமது கழகங்கள் இங்கு விரிவுபட்ட சேவைகளைத் திறம்பட புரிந்து வருகின்றன.

மற்றும் அகதிகள் புனர்வாழ்வு, புனரமைப்பு, தொழில் வாய்ப்பு, பயிற்சியாளர் என்ற வகைகளிலும் எமது சேவை அமைகின்றது.

நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவராக இருந்தவர்கள் இந்த வகையில் கொழும்பு லயன்ஸ் கழகம் ஊடாக சர்வதேச லயன்ஸ் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்து பல சீரிய திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளனர். கண் சத்திர சிகிச்சை கூட நவீன உபகரணங்கள், வாகனம்- தென்மராட்சி, வன்னிப் பகுதிக்கு (இடம் பெயர்ந்தோர்க்கான) பல்வேறு உதவிகள்- பெருந்தொகை அமெரிக்க டொலர்கள் என்ற ரீதியில் இந்த வகையில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதனை ஈண்டு



வி.எஸ்.சொக்கலிங்கம்
**நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர்**

குறிப்பிடுதல் பொருத்தமானதே.. யாழ்.நூலகப் புனரமைப்பும் இவற்றிலொன்று.

**கேள்வி**: பொதுவாக லயன்ஸ் கழகங்களின் கோட்பாடு எந்த வகையானவை?

**பதில்**: அக்டோபர் 8ஆம் திகதி உலக லயன்ஸ் தினம் எனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. 1917 இல், புகழ் பூத்த காப்புறுதி, அமைப்பாளரான மெல்வின்ஸ் ஜோன் மூலம் இந்த ஈடிணையற்ற கழகம் அரும்பி உலகெங்கும் வியாபித்தது. அக்டோபர் 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை 1 ஆவது சமமேளனம் ரெக்ஸாஸ் மாநிலத்தில் டலாஸ் நகரில் நிகழ்ந்தது. 2002 ஆம்ஆண்டின் சர்வதேச ஆளுநர் தொலைநோக்குடன் கூறிய **"To serve the community in the best possible way, harnessing the best resources within and outside, in the best possible manner, accomplishing the best desired results most effectively and efficiently"** என்பது எமது கொள்கையாகின்றது.

மேலும் சர்வதேச லயன்ஸ் கழகத்தால் **"The Lion"** என்ற மாதாந்த இதழ் ஒன்று வெளியிடப்படுகின்றது. இவ்விதழ் 19 நாடுகளில் 19 மொழிகளில் ஏக காலத்தில் வெளியாகின்றது. சகல லயன்ஸ் உறுப்பினர்களுக்கும் இவ்விதழ் அனுப்பப்படுகின்றது. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள லயன்ஸ் கழகங்களின் செயற்பாடுகள் பற்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிந்து கொள்ளும் வகையில் இவ்விதழ் வெளியிடப்படுகின்றது.

**கேள்வி**: இறுதியாக, தங்கள் பணிகள் மேன்மேலும் சிறக்க தாங்கள் எதிர்பார்ப்பது...?

**பதில**:சுயநலமற்ற, மனுக்குலத்தின் மேம்பாடு என்பதனைக் கருப்பொருளாகக் கொண்டு செயற்படும் லயன்ஸ் கழகத்தின் உயரிய இலட்சியம் சமுதாயத்தில் சகல தரப்பினராலும் புரிந்து கொள்ளப்பட வேண்டும் எமது சேவை இடருற்ற மக்களை உரிய வகையில் சென்றடைவதில் ஆத்ம திருப்தி காண முடிகின்றது.

நேர்காணல்:ஸ்ரீநடா

# ஊருக்குள்ளேயே ஒரு மூடப்பட்ட சிறை! பருத்தித்துறையில் தொடர்கிறது அவலம்!!

**1996**ஆம் ஆண்டு படையினர் யாழ்குடாநாட்டை கைப்பற்றிய வேளை பருத்தித்துறை நகரில் பாரிய இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. சுமார் 500 மீற்றர் நீளமுடைய இம்முகாமே வடமராட்சிப் பிரதேசத்தில் அமைந்திருந்த ஏனைய முகாமகளுக்கு கட்டளை இடும் தளமாகவும், இப்பகுதி மக்களுடைய சிவில் நிர்வாகப்பணிகளை நிறை வேற்றும் காரியாலயமாகவும் இருந்தது.

இப்படைமுகாம் அமைக்கப்பட்டதால் முகாமினுள் ஆலயங்கள், பாடசாலைகள், பொதுநிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், இறங்குதுறை, அரச கட்டடங்கள் என்பன உளளடக்கப்பட்டன. அத்துடன் பருத்தித்துறை நகருக்கான முக்கிய வீதிகளும் மூடப்பட்டிருந்தன. இதனால் செழிப்புற்று விளங்கிய பருத்தித்துறை நகரில் , மக்கள் நடமாட்டம அரிதாகவே காணப்பட்டது.

இலங்கைத் திருநாட்டின் பல அரசியல் தலைவர்கள், கல்விமான்களை உருவாக்கிய பெருமை மிக்க ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை என்பன முகாமினுள் முடங்கின. இதனால் பாடசாலைக்கு செல்ல மாணவர்கள் அஞ்சினர். சிவில் நிர்வாக கடடமைப்பு உருவாகிய போதும், அசசத்தின் மத்தியில் மாணவர்கள் இராணுவ காவலரண்களில் தம்மை மாணவர்கள் என உறுதிப்படுத்தி அடையாள அட்டைகளை வழங்கி விட்டே பாடசாலைககுச் சென்றனர்.

பாடசாலைக் கட்டடங்களில் இராணுவ முகாம்கள் அமைந்திருக்கப் பீதியுடன் மாணவர்கள் கல்வி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

வரலாற்றுப் பெருமையும் சிறப்பும் மிக்க கொட்டடி சித்தி விநாயகர் ஆலயம், கோட்டுவாசல் அம்மன் ஆலயம் என்பன பூசைகள் இன்றி ஆரம்பத்தில் இருந்தபோதிலும் படிப்படியாக பூசகர் சென்று பூசைகளை நடத்தினார். பின்னர் பக்தர்கள், காவலரணில் அடையாள அட்டைகளை வழங்கி விட்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இராணுவ முகாம் பகுதியிலிருந்த பருத்தித்துறைத் தபாலகம், மத்திய மருந்தகம், நகரசபை அலுவலகம், எரிபொருள் நிரப்பு நிலையம், மாவட்ட நீதவான் நீதிமன்றம், நீதிபதிகளின் வாசஸ்தலம் என்பன இயங்கமுடியாது வெளியேறித் தனியார் கட்டடங்களில்-இடவசதிகளின்றி-நெருககடிகளின் மத்தியில் இயங்கி வருகின்றன.

பருத்தித்துறை இறங்குதுறையிலிருந்த சுங்கவரி திணைக்களம், சுங்கவரி திணைக்கள அதிகாரிகளின் வாசஸ்தலம், மறியல்சாலை என்பன இன்னமும் இயங்கமுடியாத நிலையில் உள்ளன.



மாணவர்களுடன் கலந்துரையாடும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்கள் இறக்குவதற்காகச் செல்லும் லொறிகள் சோதனை செய்யப்பட்ட பின்பே அனுமதிக்கப்பட்டு வருகின்றன. தொழிலாளர்கள் சுதந்திரமாக தொழிலுக்குச் செல்ல முடியாது உள்ளனர்.

அன்றாடம் மக்கள் தமது நாளாந்தக் கருமங்களை மேற்கொள்ளுவதற்காக பாவனையிலிருந்த 751 இலக்க பஸ் சேவைக்கான பிரதான வீதி, மற்றும் நகருக்குள் வருவதற்கான வெளிச்ச வீட்டு வீதி, முதலாம் குறுக்குத்தெரு வீதி, கல்லூரி வீதி, சுப்பர் மடம் வீதி என்பன இராணுவ முகாமுக்குள் முடங்கியுள்ளதால் போக்குவரத்திற்கு கடந்த ஆறு வருடங்களாக பொதுமக்கள், மாணவர்கள் நீண்ட தூரம் சுற்றியே நகருக்கு வரவேண்டியுள்ளது.

தனியார், அரச பஸ் சேவைகளும் நீண்ட தூரம் சுற்றியே நகருக்கு வரவேண்டிய தேவையிருக்கின்றது. கரையோர மீன்பிடித் தொழிலாளர்கள் தமது கடல் உற்பத்திப் பொருட்களை நீண்டதூரம் சுற்றி வந்தே சந்தைப்படுத்தப்பட வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் தற்போது கல்லூரி வீதி, சுப்பர் மடம் வீதி என்பனவற்றினூடாக இரு பாடசாலைகளுக்கும் மாணவர்கள் சென்று வர அனுமதிக்கப்பட்டுள்ளதால் மாணவர்களுடைய நெருக்கடி ஓரளவு குறைந்துள்ளது. பிரதான வீதிகள், இணை வீதிகள் மூடப்பட்டுள்ளதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், கல்லூரி வீதிக்குச் செல்லும் மாணவர்கள் மழைக் காலத்தில் இவ் வீதியில் வெள்ள நீரோடுவதால் செல்வதால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இராணுவ முகாமுக்குள் அமைந்துள்ள, முதலாம் குறுக்குத் தெரு வீதியில (கொட்டடிப் பகுதியின் ஒரு பகுதியில்) 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும், கடந்த ஆறு வருடங்களாக, பல்வேறு கஷ்டங்கள் துன்பங்களை அவர்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இக்குடியிருப்பாளர்களின் உறவினர்கள் சென்று வருவதற்கும் பல்வேறு நெருக்கடிகள் கெடுபிடிகள் இருந்தே வருவதுடன், அச்சத்துடனே தமது நாளாந்த வாழ்வை கழித்து வருகின்றனர்.

தமக்கு இழைக்கப்படும் அநீதிகளை, சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்க அஞ்சும் இக் குடும்பத்தினர், தமது அவசர தேவைகளுக்கு வெளியே சென்று வரமுடியாத நிலை தொடர்ந்தும் நிலவி வருகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் சரத்து 2.2 இன்படி படையினர் நிலை கொண்டுள்ள வணக்கஸ்தலங்களிலிருந்து 30 நாட்களுக்குள் வெளியேற வேண்டும். சரத்து 2.3 இன்படி பாடசாலை கட்டடங்களிலிருந்து 160 நாட்களுக்குள் வெளியேறவேண்டும். சரத்து 2.4இன்படி பொதுச் சேவை கட்டடங்களிலிருந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி 30 நாட்களுக்குள் வெளியேற வேணடும் எனக் கூறப்பட்டுள்ளது.

இருந்த போதிலும்- ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலைகளிலிருந்து வெளியேறாமல் படையினர் இழுத்தடித்து வந்தனர். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி 160 நாட்களுக்குள் படையினரை வெளியேற்ற வேண்டும் என- பிரதமமந்திரி, அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு ஆகியோருக்கு அறிவித்திருந்த போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதன் விளைவாக கடந்த செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி மாணவர்கள், பொதுமக்கள் இணைந்து மாபெரும் போராட்டத்தை நடத்தியிருந்தனர். இதன்போது இராணுவக் காவலரண்களை அடித்து நொருக்கியும் வேலிகளை எரித்தும் தமது எதிர்ப்பினை இராணுவத் தரப்பினருக்கும், அரசாங்கத்திற்கும் தெரிவித்த போதிலும்- படைத்தரப்பினர் இதுவரை வெளியேறுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில்- ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர் தரப்பாடசாலைக்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ரொபேட் ஈவன், பிரிட்டிஷ பாராளுமன்ற உறுப்பினர் ஹெரத் தோமஸ ஆகியோர், முன்னணிப் பாடசாலைகள இவ்வாறு முகாம்களுக்குள் முடங்கியிருப்பது ஏற்றுக் கொள்ளப்படமுடியாதது எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை இராணுவ முகாம்- உயர் பாதுகாப்பு வலயம், இங்கிருந்து படையினர் எக்காரணம் கொண்டும் வெளியேறமாட்டார்கள் எனப் படை உயர்மட்டங்கள் தெரிவிக்கின்றன. இம்முகாம்- இறங்குதுறை, அரச, தனியார் கட்டடங்களில் அமைக்கப்பட்டது. இவ்வா றான வசதிவாய்ப்புக்களுள்ள வேறு இடம் இல்லாமையாலேயே இப்பகுதியை உயர்பாதுகாப்பு வலயமாக படையினர் வைத்திருப்பதாக அவர்கள் தரப்பில் நியாயம் கூறப்படுகின்றது.

இராணுவ முகாமினுள் முடங்கியுள்ள பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை என்பவற்றிற்கு 2500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் திணைககள அதிகாரிகள் சென்று வருகின்றனர். இறங்குதுறைக்கு நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் சென்று வருகின்றனர். நூறறுக்கு மேற்பட்ட லொறிகள் தினமும் அங்கு சென்று வருகின்றன. முதலாம் குறுக்குத் தெருவீதியில் 50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு மக்கள் நடமாட்டம் உள்ள இம்முகாம் எவ்வகையில் உயர்பாதுகாப்பு வலயம் என்க் கருதமுடியும்?

மக்களுடைய போக்குவரத்துப் பாதைகள், வணக்கஸ்தலங்கள், பாடசாலைகளில்- முகாமிட்டுக் கொண்டு, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அமுல்படுத்தாது, மக்களைப் பழி வாங்குவது எந்த வகையில் நியாயம் என்பதை அரசியல் தலைவர்களும், படை உயர் அதிகாரிகளும் தெளிவுபடுத்துவார்களா?

சபா.கிருஷ்ணன்
வடமராட்சி நிருபர்

# சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தரும் நன்னாளாக தீபாவளி அமையட்டும்!

இன்றைய தீபாவளித் திருநாளை முன்னிட்டு நேற்றைய தினம் யாழ்.நகர், மக்கள் கூட்டத்தினால் நிறைந்திருந்தது. நேற்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்த போதிலும் வியாபார நிலையங்கள் மற்றும் நடைபாதை வியாபாரங்கள் களைகட்டியிருந்தன.

தீபாவளித் தினத்தை கொண்டாடும் முகமாக மக்கள் புதிய ஆடைகள் மற்றும் பொருட்கள் வாங்குவதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இவ்வாறு நகரில் திரண்டிருந்த மக்களுடன் உரையாடியபோது -



**பெயர்:- சேகரன்**
**இடம்:- வன்னி (தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளேன்)**

இந்த முறை தீபாவளி சமாதான சூழ்நிலையில் வந்திருக்கு. இந்தச் சமாதானம் எமது படைபலத்தால் வந்தது. எல்லா மக்களும் சமாதானமாக இருப்பதையே நாங்கள் விரும்புகிறோம். எனினும் ஓர் துன்பகரமான நிகழ்வு இடம்பெற்றுவிட்டது. அதாவது எமது தலைவருக்கு 200 வருட சிறைத்தண்டனையை மேல் நீதிமன்றம் விதித்துள்ளது. இது எமது தலைவருடைய பெயருக்கு ஏற்பட்ட ஒரு களங்கம் என நான் நினைக்கின்றேன். இது ஒரு வேதனைக்குரிய விசயம். என்றாலும் இவ்வளவு துன்பங்களையும், துயரங்களையும், இழப்புக்களையும் அனுபவித்த எமக்கு இது பெரிய பிரச்சினையில்லை. வன்னியில் மக்கள் பட்ட கஷ்ரங்களை வார்த்தையால் விபரிக்கமுடியாது. இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பேச்சுவார்த்தை வெற்றியளித்து, அனைத்து மக்களுக்கும் சமாதானம் கிடைக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

**பெயர்:- மதுரா.ஏ.**
**வயது:- 17.**
**தொழில்:-மாணவி**



இத்தீபாவளியில் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாகவும் சந்தோசமாகவும் இருக்க வேண்டும் என்பது எனது விருப்பம். எத்தனையோ வருடங்களுக்கு பின் இப்படியான சமாதான சூழலில் மக்களுக்குத் தீபாவளி கொண்டாட கிடைத்திருப்பது மகிழ்ச்சியானது. இந்த நிலையே என்றும் தொடரவேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு.



**பெயர்:- கஜிவேல்**
**வயது:- 29. இடம்:- மாத்தறை.**
**தொழில்:- புடவை வியாபாரி**

நல்ல முறைல தீபாவளி வறனும். அரசியல் பிரச்சினை ஒன்னும் இப்ப இல்லதானே. நான் யாழ்ப்பாணம் வந்தது இதான் முதல் தடவை. ஆனால் இங்கு எல்லா மக்களும் சந்தோஷமாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்குது. இந்த சந்தோஷம் நிலைக்க வேணும். இதான் எனது விருப்பம்.

**பெயர்:- எ.ஆர். நாஸர்.**
**வயது:- 34.**
**தொழில்:- வியாபாரம்.**



நான் முஸ்லிம். இதால எனக்கு தீபாவளியைப் பற்றி பெரிசாத் தெரியாது. எப்படியென்றாலும் எல்லா மக்களும் ஒற்றுமையாக, சந்தோஷமாக இருக்கவேணும் என்பது தான் எங்கட விருப்பம். எல்லா மக்களுக்கும் என்ர தீபாவளி வாழ்த்துக்கள்.



**பெயர்:- எஸ்.கஜேந்திரன்**
**வயது:- 53.**
**இடம்:- பிறந்தது அனுராதபுரம் வளர்ந்தது யாழ்ப்பாணம்**

நான் தமிழ் மகன் என்ற வகையில் ஓர் தமிழ் மகனிடம் இருந்து ஓர் வாழ்த்துச் செய்தியை எதிர்பார்க்கின்றேன். மக்களுக்கு தீபாவளி வாழ்த்துச் செய்தியைத் தெரிவிக்கும் தமிழ்மகன் யார் என்ற ஓர் வினாடி வினாபோட்டியை நடத்துகிறேன். இது எப்படி என்றால் இப்ப ரேடியோக்களில் கேள்விகளை கேட்டு விடைகளை எதிர்பார்ப்பது போல நானும் நேரில் ஓர் வினாவைக்கேட்டு அவர்களிடம் இருந்து விடையை எதிர்பாக்கிறேன்.

சந்திப்பு- லிவிங்ஸ்டன், விஷ்ணு







யாழ்.நகரத்தில் களைகட்டும் தீபாவளி

# தீபாவளிகவிச்சரம்

## எத்திக்கும் இன்பங்கள் பூத்திங்கு சிரிக்கும்!

தித்திக்கும் தீபாவளியாலே.....
எத்திக்கும் இன்பங்கள்
பூத்திங்கு சிரிக்கும்!
பூரிப்பாய் நம்வாழ்வு சிறக்கும்!

தீஞ்சுவை வாழ்வு தர
தீபாவளி பிறக்கும்-!
தீர்வொன்று தந்து-நம்மோடு
சுதந்திரத்தைப் பிணைக்கும்!

நயனங்கள் சொரிந்த
நீர்கள் வற்றும்!-புதிய
பயணங்கள் செய்திட-தீபாவளி
நம் கரங்களைப் பற்றும்!

உலகெங்கும் கலகங்கள்
ஓடியே மறையும்!
தீபாவளியாலே எங்கும்
இன்பஒளியே நிறையும்!

- வதிரி த.அஜந்தகுமார்

## சமாதானத் தீபாவளியே வருக!



தேசத்தின் இருளகற்றிய தீபாவளியே வருக!
தேடுகின்ற சமாதானத் தீபாவளியாக வருக!
நாசத்தை ஒழித்த நன்னாளே! தீபாவளியே வருக!!
நற்றமிழர் வாழ்வுக்கு விடிவுதந்த தீபாவளியே வருக!
வேஷத்தை விரட்டிய வெற்றித் திருநாளே தீபாவளியே வருக!
வீணர் செயலழித்த நன்னாளே! தீபாவளியே வருக!!
நேசம் நிறைத்து மகிழவைக்கும் தீபாவளியே வருக!
நிரந்தரமான தீர்வுடன் சமாதானத் தீபாவளியாக வருக.!

-மதுரகவி-

## எல்லையிலா இன்பம் இத்திருநாளில் தா!



ஆண்டுக் கொருதடவை ஆடிவரும் திருநாளில்
பூண்ட விரதமெலாம் பொலிவு பெறும்-நீண்டு
தங்கு தடையின்றித் தருமம் தழைத்தோங்க
மங்கா திருக்கும்நல் மாண்பு.

தீபாவளி யென்னும் தீந்தமிழர் திருநாளில்
மாபாதகங்களெல்லாம் மாய்ந் தழியும்-பூவாகிப்
புலர்ந்து இதழ்விரித்து பொய்மை புறந்தள்ளி
மலர்ந்து மணப்பரப் பட்டும்.

நல்ல திருநாளில் நாடும் நலம் பெறவே
வல்ல வடிவேலவனை வழுத்துகிறேன்- எல்லையிலா
இன்பம் எமக்கீந்து ஏற்றமளித்திடவே
துன்பம் துடைத்தருள நீதா!

-கூத்தாடி-

## தீபமாய் ஒளி வீசவா!



அரக்கரை அழித்து
ஆணவத்தை ஒழித்து
அறத்தினைக் காத்திட
வந்த தீபாவளியே
நிம்மதியை நிதமும்
நித்திலத்தில் விதைத்திட
சமாதானப் புறாவாய்
வருவாயே தீபாவளியே!

சீ.என். ஹெய்ன்ஸ்
நவாலி வடக்கு


கணனி தமிழ் மென்பொருட்கள்
இலங்கையின் முதன் முறையாகத் தமிழ் கணிப் பொறிகள்
எதிர் கால கணனி யுகத்தை தமிழால் வெல்வோம்
ஆங்கில அறிவின்றி கணிப்பொறியில் தமிழில் எழுத....... தமிழால் எழுத....
விளம்பரம், ஓவ்செட் துறைகளின் பயன்பாட்டிற்கோர் சிறந்த வரப்பிரசாதம்
கலைநயமிகு அழகிய Cliparts வடிவங்கள் (கறுப்பு வெள்ளை மற்றும் வர்ணங்கள்)
இவை அனைத்துமே உங்களுக்குரிய பிரயோக குறியீட்டு முறையில் பாவிக்கும் வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.
இந்தியாவின் வள்ளி மென்பொருள் நிறுவனத்தின் இலங்கையின் முதலாவது ஏகவிநியோகஸ்தர்
UNIE ARTS (PVT) LTD.
48B, Bloemendhal Road, Colombo-13
யாழ்ப்பாணத்தில்.......
ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ் 424, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.
தொ.இல - 021-2222717

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

விண்ணப்ப முடிவுத் திகதி: 15.12.2002

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

# பிரதமரிடம் குடாநாட்டு நிலையை விபரிக்க அரசாங்க அதிபர் கொழும்பு செல்வார்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலவரம் குறித்து மிக விரைவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் சிவில் நிர்வாக நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் இடம்பெயர்ந்த பொது மக்களின் மீள்குடியமர்வு சம்பந்தமான நடவடிக்கைகளின் ஆகப்பிந்திய விபரங்கள் குறித்தும் கல்வி, சுகாதாரம், மருத்துவம் உட்பட அனைத்து விடயங்கள் தொடர்பாகவும், இவற்றைவிட குடாநாட்டின் அத்தியாவசிய சேவைகள் குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியப்படுத்தப்படவுள்ளது.

இதற்காக யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் விரைவில் கொழும்பு செல்லவுள்ளார். கொழும்பில் பிரதமரைச் சந்திக்கும் போது மேற்படி விடயங்கள் குறித்து விரிவான விபரங்கள் அவருக்குத் தெரியப்படுத்தப்படவிருக்கிறது. இதன் மூலம் தீர்க்கப்படாமல் உள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

# நீதிமன்றத் தீர்ப்பைக் கண்டித்து நாளை மட்டக்களப்பில் பேரணி

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு 200 வருடச் சிறைத்தண்டனை விதித்து மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை மட்டக்களப்பில் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

மட்டு-மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய ஏற்பாட்டில் காலை 9.30 மணியளவில் மட்டு. இந்துக் கல்லூரியில் இருந்து இப்பேரணி ஆரம்பமாகிக் கச்சேரியைச் சென்றடைந்ததும் அங்கு அரச அதிபரிடம் கண்டன மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

# உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்த வரைபடங்களைத் தயாரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள படையினரின் முகாம்களை அண்டிய பகுதிகளில் காணப்படும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வரைபடம் ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இவ்வாறான உயர்பாதுகாப்பு வலயம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. எனினும் இவ்வுயர் பாதுகாப்பு வலயம் அமைந்திருக்கும் பகுதிகள் தொடர்பான தெளிவான எல்லைக்கோடுகள் குறித்து விளக்கக்கூடிய ஆவணம் எதுவும் இதுவரை யாழ்.அரசதிணைக்களங்களிடம் இல்லை.

யாழ்.செயலகம் இவ்விடயம் குறித்து தற்போது கவனம் செலுத்தி வருகின்றது. உயர்பாதுகாப்பு வலயம் குறித்த தெளிவான எல்லைக்கோடுகளை வரையறை செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள உயர் பாதுகாப்பு வலயம் குறித்த வரைபடங்கள் சேகரிக்கப்படவுள்ளன. இவ்வரைபடங்களை அடிப்படையாக வைத்து மாவட்ட மட்டத்திலான வரைபடம் தயாரிக்கப்படவுள்ளது.



நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், கேணல் கருணா

# நீதிபதியின் துணிவான முடிவாம்; பாராட்டுகிறார் கதிர்காமர்!

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தலைவருக்கு எதிரான தீர்ப்பை வழங்கிய நீதிபதியின் துணிச்சலை கட்டாயம் நாம் பாராட்டியாக வேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு புதிய தொன்றாகப் பார்க்கவேண்டிய அவசியமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னையிலிருந்து வெளிவரும் 'ஹிந்து' சஞ்சிகைக்கு வழங்கிய கருத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## குடியமர அனுமதிக்குமாறு இன்று காலை மகஜர் கையளிப்பு !

(அரியாலை)

அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி மக்களை மீளக் குடியமர அனுமதிக்கக் கோரி இன்று காலை 10 மணியளவில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, அரச அதிபர், மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளன.

அரியாலை, கொழும்புத்துறை பிரதேச பொதுமக்கள் ஒன்றியத்தினால் கையளிக்கப்படவுள்ள இந்த மகஜர்கள் குறித்து படையினர் 7ம் திகதிக்கு முன்னர் சாதகமான பதிலைத் தராவிட்டால்,

-மாம்பழம் சந்தியில் மறியல் போராட்டம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(55)

## பாலா - ரணில்...

நகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ளது. இம்மாதம் இறுதியில் ஒஸ்லோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அங்கு செல்லும் பிரதமருக்கும் அன்ரன் பாலசிங்கத்துக்குமிடையில் ஓர் உயர்மட்ட சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதுவரை நடைபெற்ற பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்தும் மேற்கொண்டும் சமாதானப் பேச்சுக்கள் முன்னேற்றகரமாக நடைபெறுவதற்கு வேண்டிய புறநிலைச் சூழல் அமைவதன் அவசியம் குறித்தும் பிரதமருடனான சந்திப்பின் போது எடுத்துக் கூறவிருப்பதாக உத்தேச சந்திப்புக் குறித்து விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

மேலும் வடக்கு, கிழக்கில் வாழும் எமது மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டங்கள் அனைத்தும் மிக அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையை வலியுறுத்திக் கூறுவோம்-

அத்துடன் புலிகளும், அரசும் இணைந்து வெவ்வேறு நாடுகளிடம் அதாவது எம்மைத்தடை செய்த சில நாடுகளுக்கும் சென்று எமது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவி செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்வோம் என்றும் பாலசிங்கம் தெரிவித்தார்.

# சாதகமான முடிவுகளை எட்டுவதில் எமக்கு வெற்றி

## நோர்வே அமைச்சர் விதார் ஹெல்கிசன்

(நொகன்பத்தமிலிருந்து விதுர்ஷன்)

கடின உழைப்புக்கும் மத்தியில் சாதகமான முடிவுகளை எட்டுவதில் தாம் வெற்றி பெற்றிருப்பதாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது கட்டப் பேச்சுக்கள் முடிவுற்ற பின்னர் செய்தியாளரிடம் பேசும்போதே நோர்வே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் பேச்சுக்கள் திருப்தியான சூழலில் இடம்பெற்றுள்ளதாக விதார் ஹெல்கிசன் மேலும் தெரிவித்துள்ளார்.

## இனி மாதாந்தம்...

18 ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரையும் நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பேச்சுக்கள் எங்கு நடைபெறும் என்பதை நோர்வேயின் வெளிவிவகார அமைச்சு அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (01)

## முழுமையான...

ணிப்புடன் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியல் உப குழுவானது சமஷ்டி மற்றும் இணைந்த கூட்டாட்சி அமைப்புக்கள் பற்றி தீவிரமாக ஆராயவுள்ளது என்றார்.

அதேவேளை தமிழ்கட்சிகள் பற்றிக் குறிப்பிடுகையில்-

தமிழ்க்கட்சிகளின் எதிர்காலம் மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. எந்தக் கட்சி மக்களுக்கு விரோதமாகச் செயற்படுகின்றதோ அந்தக் கட்சி மக்களால் தூக்கி எறியப்படும்.ஜனநாயக நீரோட்டத்தில் மக்களின் கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்களின் தலைவர்களையும் கட்சிகளையும் தேர்ந்தெடுக்கும் வகையில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மக்களுக்கு விரோதமாகச் செயற்பட்ட கட்சிகள் வெளியேற்றப் படுவார்கள் என்பது நிச்சயம் என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

ஒப்புநோக்குநர் தேவை

அனுபவம் உள்ள ஒப்பு நோக்குநர்கள் தேவை. 06.11.2002 காலை 11 மணிக்கு நமது ஈழநாடு அலுவலகத்துக்கு நேரில் வரவும்.

பொது முகாமையாளர்,
'நமது ஈழநாடு'

DMN இன் பாடகர், பாடகிகளுக்கான பாடும் சுரங்கள் போட்டி நிகழ்ச்சி



இப் போட்டியில் பங்குபற்ற ஆர்வமுடைய, தாளத்துடனும், சுருதியுடனும் பாடக்கூடியவர்கள் எதிர்வரும் 06 ஆம் திகதி (புதன்கிழமை) காலை 9.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு நேரில் சமுகம் தரவும். இது வரை பதிவு செய்தவர்களும், பதிவு செய்யத்தவறியவர்களும் சமுகம் கொடுக்கவும்.

DIGITAL MEDIA NET WORK

(சி.153)



சொலக்ஸ் மூக்குக் கண்ணாடியகம்



லக்ஷறி பல்கட்டும் இடம்

உளம் கனிந்த தீபாவளி வாழ்த்துக்களை எமது அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தெரிவிக்கின்றோம்.

- நவீன கண்ணாடி பிறேம்களில் கண்பரிசோதித்து மூக்குக் கண்ணாடிகளை பெற்றுக் கொள்ளவும்
- சங்குப் பற்களை சீனமுறையில் கட்டிக் கொள்ளவும்
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து குறுகிய காலத்தில் சீரமைத்து கொள்ள இணைந்த சேவையை வழங்குகிறார்கள்

232/A கண்டி வீதி,
சாவகச்சேரி



(சி-111)

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தீபாவளி சிறப்பு மலர்

எம் இனிய வாடிக்கையாளர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்

**கஜா மோட்டோஸ்**

✣ மோட்டார் சைக்கிளா?
✣ நீர் இறைக்கும் இயந்திரங்களின் உதிரிப்பாகங்களா?
எதுவானாலும் -
நம்பிக்கை/நியாயம்/உத்தரவாதம்
என்பவற்றுடன் பெற நாடுங்கள்

**கஜா மோட்டோஸ்**

(சி-108) 234/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

களிப்பின் உச்சம்

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**



சொக்கலட் கிறிப்ஸ், ஸ்பெஷல், புருட்சலட், வனிலா சொக்லட், ஜெலி, நட்ஸ், ஐஸ்கிறீம் வகைகள் மற்றும் மட்டன் றோல்ஸ், கட்லட், பற்றிஸ், கேக், மஸ்கட், பீடா மற்றும் குளிர்பான வகைகள் எதுவானாலும் சுவைத்து மகிழ....

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

(சி-086) 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கரன் வாச் அன் றேடியோ**

சகலவிதமான, தரமான வானொலிப் பெட்டிகள், கடிகாரங்களை
நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும், அவற்றைக் குறைந்த விலையில் திருத்தி அமைக்கவும்





விரையுங்கள் கரனுக்கு - நேரம் தவறாதீர்கள்
(சி-103) No.91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஸ்ரீராம் ஒவ்(f)செற் பிறின்ரேர்ஸ் நிறுவனத்தினரின் உளம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்



! நவீன முறையிலான கணனி அச்சுவேலைகளை நவீன பாணியில்
! சிறந்த தரத்தோடும் குறித்த நேரத்திலும் செய்து பெற்றுக்கொள்ளவும்;
மற்றும் ஒவ் (f) செற் பிறிண்டிங்கிற்குத் தேவையான உபபொருட்கள்
அனைத்தையும் நியாயவிலையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய சிறந்த நிறுவனம்

**ஸ்ரீராம் ஒவ்(f)செற் பிறின்ரேர்ஸ்**



250, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
கிளை :- கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டி.

**சிந்தனையில் நல்லுணர்வைத் தூண்டும்**
**தீப ஒளி பிரகாசிக்கட்டும்**

# இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

# கொமர்ஷல் வங்கி

(சி-132)

# தீபாவளி சிறப்பு மலர்

நமது இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

**A9 அச்சகம்**

- பல வர்ணப்படங்கள் கொழும்பில் அச்சிட்டு மிகக் குறுகிய காலத்தில் வழங்கப்படும்.
- கொழும்பில் கிளை ஸ்தாபனத்தையுடைய ஒரேயொரு அச்சகம்.

**A9 பிறிண்டேர்ஸ்**

676, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
T.P. - 0777-271479, 0777-271478

(சி-104)

---

எல்லோருக்கும் எமது இதயபூர்வமான தீபாவளி வாழ்த்துக்கள்

**பசுவதை மகா கொடிய பாவமாகும்**



சத்துள்ள பாலைத் தரும் எனக்கு நீங்கள் தரும் தண்டனையா?

**வேணி ரான்ஸ்போட்**

T.P. - 2046
2661

165, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

(சி-126)

---

நமது இதயங்கனிந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

**தீபாவளியை முன்னிட்டு**

**புதிய கனன் போட்டோக் கொப்பி மெசின்**

**அறிமுகப்படுத்தப்படுகிறது**

**NP 7161** - விலை **167,000 /-** + VAT + TAX
**NP 1215** - விலை **155,000 /-** VAT + TAX உட்பட




பாவித்த சகலவிதமான
போட்டோ கொப்பி மெஷின்
ஆகக் கூடிய விலை 40,000/- ற்கும்,
ஆகக் குறைந்தது 10,000/- ற்கும்
எங்களால் கொள்வனவு செய்யப்படுவதுடன்
இதன் பெறுமதிக்கேற்ப
புதிய மெஷின் (NP 7161)
விலை கழிக்கப்படும்.

**நவகலா**

**Metro Politon Agent**

200, K.K.S. Road,
யாழ்ப்பாணம்.

(சி-064)

---

வாடிக்கையாளர்களுக்கு எம் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்

**இதோ!**
**சாவகச்சேரியில்**
**மீண்டும் அதே இடத்தில்**

**அம்பிகா**

**மருந்துச்சாலை**

கண்டி வீதி, சாவகச்சேரி.

*கிளை:-*
K.K.S. வீதி, இணுவில்.

---

இன்பத் தீபாவளியின் இனிய கொண்டாட்டத்தில் உங்களுடன் நாமும்...

# SERANDIB AIR LINE

**மாற்றத்தை உணருங்கள்...**

## SERANDIB - MANOJ



இல.13, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.- 021 2223916, 0777801038
0777 517019, 01 390128

இல.500, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-6
T.P.- 505632,
500626

(சி-147)

---



எல்லோருக்கும் GREAVES LIMITED எமது தீபாவளி வாழ்த்துக்கள்

# தில்லையம்பதி மோட்டோர்ஸ்




இல.236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**AGENTS FOR - GREAVES, SPARE PARTS**

☆ விவசாய நீர் இறைக்கும் இயந்திரம். மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்.
☆ மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-134)